உ

முருகா

# திருமந்திரம் – கிரியைகள்

## மூன்றாம் நாள் சொற்பொழிவு

( 03–09–1999 )

பெரியோர்களே! எல்லாம் வல்ல வள்ளி மணவாளனது வற்றாத கருணை நலத்தாலே இந்த அற்புதமான திருமந்திர சிந்தனைகள் என்று சொல்லப்படுகின்ற எழில் ஞான வேள்வியில் இன்றைய தினம் மூன்றாவது நாள். இன்று நாம் திருமந்திரத்தில் கிரியைகள் என்பதைப் பார்க்க இருக்கிறோம்.

முதல் நாள் திருமந்திரத்தில் ஒரு தோற்றுவாய் செய்து கொண்டோம். மறுநாள் திருமந்திரமே தமிழாகமம்–அதுவே ஆகமங்களின் மூலம் என்பதை உறுதிப்படுத்தினோம். ஆகமம் என்றால் அதில் கிரியைகளை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்க வேண்டும். அந்த கிரியை முறைதான் இன்று நாம் பார்க்க இருக்கிறோம்.

ஒன்றின் ஒன்று தொடர்ச்சியாக வருவது இருக்கிறதே இதைத்தான் இயைபு என்று சொல்வர். சிவஞான பாடியத்தைப் படித்த பெரியவர்களுக்கு தெரியும் இயைபு, சம்பந்தம், யாப்பு என்ற மூன்றும் ஒன்று என்பது. சம்பந்தம்–வடமொழி இயைபு, யாப்பு என்பன தமிழ்ச் சொற்கள். இது இல்லாமல் பேசினால் சம்பந்தமில்லாமல் பேசறான் என்பார்கள். இதைத் தான் இயைபு என்பார்கள். இயைபிலே பல வகை உண்டு. இயல் இயைபு, அதிகார இயைபு, நூற்பா இயைபு இப்படி பல வகை. அதில் நேற்றைக்குப் பார்த்த தலைப்பான ஆகமத்திற்கும் இன்றைக்குப் பார்க்கும் தலைப்பான கிரியைக்கும் உள்ள இயைபு தலைப்புப் பொருளினால் வந்த இயைபு. அதன் வழி இன்றைய தினம் திருமந்திர கிரியை முறைகளைப் பற்றி கொஞ்சம் சிந்திப்போம்.

திருமந்திரத்தில் சுமார் 800 முதல் 1200 பாடல்கள் கிரியை பற்றி எடுத்துச் சொல்லுவனவாக அமைந்திருக்கின்றன. மொத்தம் மூவாயிரம் பாடல்களில் சற்றேறக்குறைய 1000 பாட்டுக்கள் என்றால் மூன்றில் ஒரு பாகம் ஆகிறது. இத்தனை பாடல்களையும் இன்று நாம் முழுமையாகப் பார்த்துவிட முடியாது. ஒரு நாளில்–ஓரிரண்டு மணி நேரத்தில் எல்லாப் பாடல்களையும் பார்க்க முடியுமா? எது முக்கியமோ, எது தேவையோ அந்தச்சில பாடல்களைப் பார்த்தோமானால் அதுவே நமக்கு பெரிய ஆன்ம திருப்தியை அளிக்கும்.

முதலில் கிரியை முறைகளைத் தமிழினாலே செய்ய முடியுமா என்பதே ஒரு கேள்வி. இது வரை கிரியை முறைகளை தமிழில் பயன்படுத்தி இருக்கிறார்களா? இமு உறுதி செய்யப்பட்டால் தான் திருமந்திரத்தை அதற்கும் பயன்படுத்த முடியுமாத? என்பதைப் பார்க்க வேண்டும். இது பற்றி திருமந்திர நூலின் ஆசிரியரான திருமூலர் என்ன சொல்கிறார் என்று பார்க்கணும். மூல ஆசிரியர் கருத்திற்கு மாறாகச் சொல்லக்கூடாது. ஆசிரியர் கருத்துக்கு ஒன்றித்தான் உரை கொள்ள வேண்டும். இது ரொம்ப முக்கியம்.

திருக்குறளுக்கு உரை எழுதிய பெருமகனார் மொத்தம் பத்துப்பேர். இந்த உரைகளில் பரிமேலழகர் உரைதான் உயர்ந்தது என்று போற்றப்படுகிறது. ஏன்? மூல ஆசிரியர் கருத்தினை வாங்கி அதிலிருந்து

பிறழாமல் உரை எழுத வேண்டும். அப்படிப்பட்ட உரை தான் சிறந்ததான உரையாகக் கருதப்படும். இதைப் பரிமேலழகர் உரையில் பலபட பரக்கக் காணலாம். உதாரணத்திற்கு ஒன்றைப் பார்ப்போம்.

கற்க கசடற கற்பவை கற்றபின்

நிற்க அதற்கத் தக.

இந்த திருக்குறள் எல்லோருக்கும் தெரியும். என்ன பொருள்? கற்க வேண்டியதை கற்றுக்கொள். கற்ற பின்னால் என்ன கற்றாயோ அதன்படி நடந்து கொள். சரி, இங்கே ஒன்றைக் கவனிக்கணும். திருவள்ளுவர் ஒரு சொல்லை ம இந்தக் குறளில் போடுகிறார். அந்த சொல் கற்றபின் என்பது. கற்றபின்— அதாவது கல்வி எப்பொழுது முடிகிறது? பட்டப்படிப்பிலா? முதுகலைப் படிப்பிலா? முனைவர் பட்டம் வாங்கிட்டா முடிஞ்சுடுமோ?

திருவள்ளுவர் இன்னொரு குறளில் சொன்னார்,

யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்

சாய்த்துணையும் கல்லாத வாறு.

இதன் மூலம் திருவள்ளுவர் சொல்வது இது தான். நல்ல முறையில் கல்வி கற்றுக் கொள். நல்ல முறையில் என்றால் யூனிவர்சிடியில் ஒழுங்காகப் போய் கற்றுக் கொள்வது அல்ல. தினந்தோறும் தினந்தோறும் யாராவது ஒருவராலே ஏதாவது ஒரு வகையில் கற்பிக்கப்பட்டுக் கொண்டிருப்பது தான் பாடம் அதன் மூலம் பெறுவதே உண்மைக்கல்வி. உலகத்தின் காலம் என்ன என்று வரையறுக்கப்படவில்லை. உன் காலமும் அப்படியே. இரண்டும் இறைவனால் வரையறுக்கப் பட்டதாலும் நமக்குத் தெரியாதவை. எனவே நீ செய்ய வேண்டியத என்ன தெரியுமா? சாகும் வரை துறைதோறும் நுணக்கங்களைக் கற்று வருவாயானால் உனக்கு நீ பிறந்த நாடு மட்டுமல்ல எல்லா நாடும் உன்னதாகும். எல்லா ஊரும் உன்னதாகும். கற்றோருக்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு. அவ்வளவு சிறப்புடைய கல்வியை சாகும்வரை கல் என்கிறார்.

இப்ப பாருங்க! சாகும் வரை கல் என் றவள்ளுவர்தான் கற்றபின் நிற்க என்கிறார். சாகும் வரை கத்துக்கிட்டு அதுக்குப் பின்னால நிக்கறதுன்னா எப்படி? செத்த பின்னா நிற்க முடியும்? செத்த பின் படுக்க வைத்துடுவான். எங்க நிக்கறது?

இதை யோசிக்கிறார் பரிமேலழகர். உரை ஆசிரியர் கருத்து மூல ஆசிரியர் கருத்துக்கு வேறுபடக் கூடாது. இங்கு ஒரு பொருள் அங்கு அதற்கு மாறாக ஒரு பொருள் என்று இடிக்கக்கூடாது. அதனால் கற்றபின் என்பதில் வரும் பின் என்பதை காலப்பொருளில் பின்னாக எடுத்துச் செல்லாமல் கற்றால் என்று ஆல் உருபு கொடுத்து உரை செய்தார். மணக்குடவர், காளிங்கர் போன்ற பிற உரையாசிரியர்களிடத்திலிருந்து பரிமேலழகர் இந்த இடத்தில் தான் வேறுபட்டு உயர்கிறார்.

அதாவது கற்றபின் என்பதற்கு கற்றால் என்று உரை சொல்லி நன்கு கற்று அந்த ஒரு உயர்விப்படி நில் என்றாரே பரிமேலழகர் அதுதான் உரை. கல்வி அதிகாரத்தில் முதல் குறளுக்கு உரை எழுதும்போதே அந்த அதிகாரத்தின் ஏழாவது குறள் பொருள் இடிக்காமல் ஒத்திட்டுப் பார்த்து இரண்டிற்கும் பொருந்த அமைதிப்படுத்தி உரை செய்தாரே அதுதான் உரை. எனவே உரை செய்யும் போது ஆசிரியர் ஒரு பொருளைப் பற்றி என்ன கருத்து கொண்டிருக்கிறார் என்ற நூல் முழுமையும் பார்த்து, அந்த நூலை மேலிருந்து ஒரு பறவை பார்ப்பது போல முழு வீச்சாகப் பார்த்து உரை எழுதுவதே நுட்ப உரை.

சொல்லுக்குச் சொல்உரை அதாவது இந்தக் குறளில் பின் என்றால் பின்னால் என்று உரை எழுதுவது உரையன்று.

அதைப் போல திருமந்திர நூலை ஒரு முழு வீச்சாகப் பார்த்துக் கொண்டு அந்தப் பார்வையில் ஆசிரியரின் உள்ளக் கருத்தைப் பதிய வைத்துக் கொண்டு திருமூலர் கிரியை முறைகளைப் பற்றி என்ன கூறுகிறார் என்று பார்க்க வேண்டும்.

திருமூலர் கிரியை முறைகளைச் செய்வதற்கு எந்த மொழியைத் தேர்நதெடுத்ததர் என்பதை உணர்ந்து கொண்டோமேயானால் அந்த மொழியில் அந்த முறைகளைப் பின்பற்றி ஒழுகினால் திருமந்திரத்தை பயன்படுத்துவதற்கு நமக்கு முழு ஏற்பு—அங்கீகாரம் கிடைக்கும்.

எனவே, கிரியை முறைகளைத் தமிழ்மொழியில் செய்யலாமா என்ற கேள்விக்கு விடைகாணமுன் தமிழைப் பற்றி திருமூலர் என்ன கருத்து கொண்டிருக்கிறார் என்று பார்க்கணும். ஒரு பாடலில் அவர் இதுபற்றிய தமது கருத்தைத் தெளிவாக்கியிருக்கிறார். அந்தப பாடலைப் பாருங்கள்!

தமிழ்மண் டலம்ஐந்தும் தாவிய ஞானம்
உமிழ்வது போல உலகம் திரிவார்
அவிழும் மனமும்என் அதி அறிவும்
தமிழ்மண் டலம்ஐந்தும் தத்துவம் ஆமே

இந்தப் பாடலுக்குப் பொருள்காணம்போது தவறாக உரைகண்ட பேராசிரியர்கள் பலர். பாடலில்,

அவிழும் மனமும்என் ஆதி அறிவும்
தமிழ்மண் டலம்ஐந்தும் தத்துவம் ஆமே

என்ற வரிகள் உயிரான வரிகள். மற்ற இரண்டு அடிகளும் தலைப்புக்கு ஏற்ப செய்தியைத் தருவன. நாம் சிந்திக்க வேண்டியது இந்த இரண்டு அடிகள் தான்.

பெரியோர்களே! நம்முடைய உடம்பு முப்பத்தாறு தத்துவங்களால் ஆனது. அது இந்த அருள்நெறி திருக்கூட்டத்தாருக்கு நன்கு தெரியும். முதல் ஙைந்து தத்துவங்கள் ஙைந்து பூதங்கள் ஆகும். அதாவது மண், நீர், தீ, காற்று, வெளி என்ற ஐந்து பூதங்கள். இவை கலந்த மயக்கமே இந்த உலகம் என்று புறநானூறும் தொல்காப்பியமும் கூறுகின்றன. அடுத்து இந்த ஐந்து பூதங்களுடைய காரணமான தன் மாத்திரைகள் ஐந்து. அவை சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன. இவற்றின் வகைதெரிவான் கட்டே உலகு என்பது திருக்குறள். அடுத்து கால்கள்,கைகள், நாக்கு, எருவாய், கருவாய் என்ற கன்மேந்திரியங்கள் ஐந்து. மொத்தம் 20. இந்த மாலை நேரத்துல கணக்கு காட்டி பயமுறுத்துகிறேன்னு நினைக்க வேண்டாம். கணக்குத் தொல்லை எல்லாம் ஒழிந்துபோன இந்த வயசுல நிமமதியா இருக்கலாம்னு இங்க வந்தா இங்கயும் கணக்கா? என்று அலுத்துக்க வேண்டாம்.

மொத்தம் எத்தனை சொன்னேன்? இருபது. அதற்கப்புறம் மனம். இந்த மன தத்தவம் சிவஞானமுனிவர் வாக்குப்படியும், சிவாகமப்படியும் மனம், புத்தி,. சித்தம், அகங்காரம் என்ற நானகாக விரியும். இந்த மனதத்தவம் நான்கும் சேர்க்க வருவது 24 தத்துவங்கள்.

இந்த 24 தத்துவங்களையும் ஒரே வார்த்தையில சொல்லலாம். அதாவது ஆன்ம தத்துவம். அதற்கு மேல குணதத்துவம் இதைப் பிரகிருதிமாயை அல்லது மூலம் என்றும் சொல்வார்கள். அதற்குமேல புருட தத்துவம். அதற்கு மேல கலை, காலம், நியரி, வித்தை,அராகம் என்கிற ஐந்து தத்துவங்கள். இவற்றை பஞ்ச கஞ்சுகங்கள் என்றும் கூறுவர். கஞ்சுகம் என்றால் போர்வை என்று பொருள். இவை ஐந்தும் ஐந்து போர்வைகள். இந்த ஐந்துடன் குண தத்துவத்தையும், புருடதத்துவத்தையும் சேர்த்து ஒரே வார்த்தையில் சொல்லாம். அதாவது வித்தியா தத்துவம்.

இங்கே நான் வந்தவுடனே தான் ஸ்ரீஜயா அவர்கள் அருள்நெறி மன்றப் பதிப்பான சித்தாந்தக் கையேடு ஒன்றைக் கொடுத்தார்கள். இது ஒரு அற்புதமான சித்தாந்தக் கையேடு. ரெடி ரெக்கனர் என்ற முறையில் வெளியிடப்பட்டிருக்கிறது. மிக நல்ல பணி, பாராட்ட வேண்டிய நல்லபணி. இந்தச் சித்தாந்தக் கையேட்டிலும் முன்னால் சொன்ன ஆன்ம தத்துவம் பற்றியும், வித்யா தத்துவம் பற்றியும் வருவதைப் பாருங்கள்.

இனி 7 வித்தியா தத்துவங்களுக்கு மேல் உள்ளவை ஐந்து சிவதத்துவங்கள். அவை சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம் அல்லது சதாசிவ தத்துவம், சத்தி தத்துவம், சிவ தத்துவம் என்பன.

இந்த மூன்று வகைத்தத்துவங்களையும் சேர்த்தால் மொத்தம் 36. அதாவது ஆன்மத்துவம் 24+ வித்தியா தத்துவம் 7+ சிவதத்துவம் 5.

எனவே முப்பத்தாறு தத்துவங்களை மூன்று கேட்டகரியாக வகையாகப் பிரிக்கலாம். முதலில் வைத்துக் கூறப்படும் 24 தத்துவங்களும் ஆன்ம தத்துவம். அதன் பிறகு 7 தத்துவங்களும் வித்தியா தத்துவம். அதன் பிறகு ஐந்து தத்துவம் சிவதத்துவம்.

இது சிவதீட்சை பெற்றவர்க்கு நன்கு புரியும். இங்கே பலபேர் நெற்றியில் விபூதி குழைத்து வைத்திருக்கப் பார்க்கும் போது ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. வெகு சில இடங்களில் தான் இந்தக் காட்சியைப் பார்க்க முடியும். ஈரோடு, திருநெல்வேலி போன்ற இடங்களில் இதைப் பார்க்கலாம். சென்னையில் விபூதி வைச்சுகிட்டு போவதற்கே வெட்கப்படுகிறார்கள்!

சரி! சைவ அனுட்டானத்தை–சந்தியை அனுட்டிப்பவர்கள் ஒன்றைச் சொல்வார்கள்

ஓம் ஆத்ம தத்தவாய ஸ்வதா!

ஓம் வித்யா தத்வாய ஸ்வதா!

ஓம் சிவ தத்தவாய ஸ்வதா!

இவ்வாறு மூன்று முறை ஓதி உளுந்தளவு உள்ளங்கை நீரை மூன்று முறை பருக வேண்டும். இதற்கு என்ன பொருள்? இவை அனைத்தையும் ஆண்டவனுடைய பாதகமலங்களில் ஒப்படைக்கின்றோம் என்று தாரை வார்த்து தருவது.

இந்த வழிபாட்டு முறைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். இப்ப நாம் பார்த்துக் கொண்டிருப்பது கிரியை முறைகளைத் தானே! கிரியைகளில் முதலில் உடல், பொருள், ஆவியை இறைவனுக்கு ஒப்படைத்த பின் தான் வழிபாடு ஆரம்பம் என்று ஆன்றோர்கள் இதனை இவ்வாறு வகுத்தார்கள். அப்போது தான் ஆண்டவன் வழிபாடு சிறக்கும் பரிணமிக்கும்.

எனவே தான் திருமுறைத் திருமணங்களில் கூட முதலில் எடுத்த உடனே மணமகன், மணமகள் கைகளில் தண்ணீரைக் கரண்டியால் ஊற்றி, பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி என்று ஓதி கையைச் சுத்தம்

செய்யச் சொல்லி அப்புறம் முன்னால் கூறிய மூன்று மந்திரங்களையும் ஓதி மூன்று முறை நீரைப் பருகச் செய்கிறோம். அதாவது,

ஒம் எல்லாம் வல்ல பரம்பொருளுக்கு என் ஆன்ம தத்துவங்களை ஒப்படைக்கின்றேன்.

ஓம் எல்லாம் வல்ல பரம்பொருளுக்கு என் வித்யாதத்துவங்களை ஒப்படைக்கின்றேன்.

ஓம் எல்லாம் வல்ல பரம்பொருளுக்கு என் சிவ தத்துவங்களை ஒப்படைக்கின்றேன்

என்று தூயதமிழால் மந்திரங்கள் ஓதி நீரை மூன்று முறை பருகச் செய்கிறோம்.

அப்படியானாலு் முதலில் மனத்தை நிலைப்படுத்தி இறைவனிடம் ஒப்படைக்க வேண்டும். அப்படித் தொடங்கும் எந்தச் செயலும் பரிணமிக்கும். அதனால் தான் ஔவையார்,

வாக்கும் மனமும் இல்லா மனோலயம்

தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து

என்று பாடினார். அதாவது மனம் எங்கெங்கயோ லயித்து நிற்கிறது. அங்கிருந்து முதலில் அதைப் பிரித்து நம் வழிக்குக் கொண்டு வர வேண்டும். பிறகு இறைவனிடம் ஒப்படைக்க வேண்டும். மனமது செம்மையானால் தான் இறைவனை அடைய முடியும்.

இந்தப் பொருளை உள்ளடக்கி திருமந்திரத்தில் அவிழும் மனமும் என்ற ஆன்ம தத்துவங்களைக் குறித்தார். ஆன்ம தத்துவங்கள் 24ல் அது தான் தலைமைப் பொறுப்பேற்று அவற்றை இயக்கி வைப்பதால் மனம் என்று கூறினால் அது ஆன்ம தத்துவத்தைக் குறிக்கும்.

பிறகு எம் ஆதி அறிவும் என்று வித்திய தத்துவங்கள் ஏழையும் குறித்தார். காரணம் உயிருக்கு அறிவு இந்த தத்துவங்களின் மூலம் தான் ஊட்டப் பெறுகிறது.

இதன் பிறகு சிவதத்துவம் ஐந்தையும் சொல்ல வேண்டும். ஆனால் திருமூலர் சிவதத்துவம் என்று சொல்லாமல் அந்த ஐந்து தத்துவத்தையும் தமிழ் மண்டலம் ஐந்தும் தத்துவம் ஆமே என்று கூறினார். எனவே தமிழ் மண்டலம் வேறு சிவதத்துவம் வேறல்ல. இவ்வாறு திரூமூலர் தமிழ்மண்டலம் ஐந்து என்று சிவதத்துவம் ஐந்தையும் கூற இந்த உண்மைப் பொருளைத் தவறவிட்ட மதிப்பிற்குரிய வெள்ளை வாரணனார் தமிழ் மண்டலம் ஐந்தாவன சேர, சோழ, பாண்டிய மண்டலங்கள் மூன்று. அப்புறம் தொண்டை மண்டலம் மற்றும் கொங்குமண்டலம் என்பன இரண்டு. ஆக தமிழ் மணடலம் ஐந்து என்றால் அ தற்கு மன் அடியில் அவிழும் மனமும் எம் ஆதி அறிவும் என்பதற்கு சற்றும் பொருந்தி வரவில்லை என்பதை கருத்தில் கொள்ளாமலும் தமிழ் மண்டலம் ஐந்தும் தத்துவம் ஆமே என்ற வரியில் கூறப்படுவது தத்துவம் என்பதைக் கருத்தில் கொள்ளாமலும், மண்டலம் என்ற சொல்லைக் கொண்டு சேர மண்டலம், சோழ மண்டலம் என்று பொருந்திவராத பொருளை வலிந்து கூறியது வெட்ட வெளிச்சமா தெரியுது. இதைவிட வேடிக்கை என்னன்னனா, இந்தத் தவறான பொருளை அடிப்படையாகக் கொண்டு கொங்கு மண்டலம் என்ற மண்டலம் பிரிந்த காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு, எனவே திரூமூலர் காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு என்று சொன்னது தான்.

அது ஒரு புறமிருக்கட்டும். சிவதத்துவம் ஐந்தையும் தமிழ் மண்டலம் என்று திருமூலர் கூறியதை இன்னும் கொஞ்சம் ஆராய்வோம்.

சிவதத்துவம் ஐந்திலே ஒன்று சதாசிவ தத்துவம். இந்த சதாசிவ தத்துவத்திலே இருக்கிற சதாசிவர்கள் இரண்டு வகை 1) அணுபட்சத்து சதாசிவர்கள் 2) சம்புபட்சத்து சதாசிவர்கள். இப்படி சொன்னாள் புரியாது. வேறு விதமாகச் சொல்கிறேன்.

எங்கள் ஊரில் இரண்டு வகை ஐ.ஏ.எஸ். ஆபிசர்கள் உண்டு. இங்கு எப்படி என்று தெரியவில்லை. ஒரு வகை நேரடியாக பரீட்சை எழுதி ஐ.ஏ.எஸ். ஆபிசர் ஆவது. இன்னொன்று வகை டி.ஆர்.ஓ. துணை கலெக்டர், ஐ.ஏ.எஸ். ஆபிசர் என்று கீழ் பதவிகளிலிருந்து பதவி உயர்வு பெற்று அப்பதவி உயர்வின் மூலம் ஐ.ஏ.எஸ். ஆபிசர் ஆவது. இப்படி இருவகை உண்டு. அதுபோல தேர்வு எழுதி நேரடியாக ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆனவர்கள ்போல சம்பு பட்சத்து சதாசிவர்கள. கீழ் பதவியில் இருந்து பதவி உயர்வு மூலம் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆனவர்கள் ்போல அணுபட்சத்து சதாசிவர்கள். இந்த இருவகை சதாசிவர்களும் ஆன்மாக்கள் தான். இவர்கள் எத்தனை காலமாக இந்த சதாசிவப் பதவியில் இருப்பார்கள்? முதன் முதலில் உருவான சதாசிவர் யார்?

பெரியோர்களே! இந்த இடத்தில் ஒன்றைச் சிந்திக்க வேண்டும். இருவகை சதாசிவர்களும் ஆன்மாக்கள் தான். ஆன்மாக்கள் என்று இந்த உலகில் உண்டோ அன்றிலிருந்தே சதாசிவர்கள் உண்டு. ஆன்மாக்கள் இந்த உலகில் என்று தோன்றின?

என்று நீ அன்ற நான் என்று தாயுமானவர் பாடினார். கடவுள் எனக்கு சீனியர் இல்லை. கடவுள் எண்ணைக்கு இருந்தாரோ அண்ணைக்கே நானும் உண்டு அதாவது ஆன்மாக்கள் உண்டு. ஆனால் என்ன ஒரு வேறுபாடு என்றால் என்றுமே கடவுள் ஆண்டான் நாம் அவனது அடிமை. என்று நீ அன்று நான் என்று பாடிய தாயுமானவர் உடனே உன்னடிமை அல்லவோ என்றும் பாடினார்.

திருமூலர் கூட, பதி, பாசம் எனப் பகர் மூன்றில் ்பதியினைப் போல் பசு பாசம் அனாதி என்று பொருள் மூன்றுமே இன்ன காலத்திலே தோன்றியது என்று கூறவொண்ணாத அனாதிப் பொருள்கள் என்று பாடினார். ஒண்ணுக்கு ஒண்ணு புதிதா வந்ததில்லை. இந்த மூணுமே ஒன்றாக இருக்கிறது. இந்த மூணும் இருக்கும் போது இறைவனுக்கு எண்ணத் தொலையா உயிர்கள் எண்ணத் தொலையா துன்பத்தில் உழலுவது கண்டு கருணை பூக்கிறது. நம் நன்மைக்காக இந்த உலகை பாசப் பொருளான மாயையிலிருந்து படைக்க வேண்டும் என்ற எண்ணம் மேலிடுகிறது.

நாம் எப்படி இருக்கிறோம்? தாயுமானவர் மிக அற்புதமான இறைவன் நமக்கு உடலையிம், உலகையும் படைத்துத் தருவதைப் பாடுகிறார்.

காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற

கண்ணிலாக் குழவியைப் போல்

கட்டுண்டிருந்த எமை வெளியில் விட்டு...

இருட்டில் இருந்தாலே துன்பம் கட்டிப் போட்டால் துன்பம் அதை விட அதிகம். பெரியவர்களாயிருந்தால் தட்டுத் தடுமாறி சமாளித்து ஒரு வழியாக அந்த இருட்டிலிருந்து கட்டவிழ்த்துக் கொண்டு வெளியே வரலாம். குழந்தையாய் இருந்தால் துன்பம் இன்னும் அதிகம். அதுவும் கண் இல்லாத குருடாய் இருந்தால் போச்சுடா, அம்மா! துன்பமோ துன்பம்!! கண்ணிலாக் குழவி என்றால் எப்படி வெளியேறுவது?

இப்படிப்பட்ட இருளில்—அதாவது அறியாமையாகிய இருளில்—மூழ்கியிருக்கும் ஆன்மாக்களை வெளியே கொண்டு வரும் பொருட்டு கடவுள் இந்த உலகை மாயையிலிருந்து படைக்கிறார் என்று சைவசித்தாந்தம் எடுத்துச் சொல்கிறது. கடவுள், சும்மா தானே இருக்கிறோம். ஒரு பொழுது போக்கிற்காக இந்த உலகைப் படைப்போம் என்று இந்த உலகைப் படைக்கவில்லை. அதற்கு ஒரு நோக்கம் உண்டு ஒரு பயன்பாடு உண்டு என்று சைவ சித்தாந்தம சரியாக அளவை இலக்கணப்படி அளந்து சொல்லுகிறது.

உலகைப் படைக்கும் போது ஆண்டவனுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. இந்த ஆன்மாக்களுக்கு உடலைப் படைக்கும் போது தான் பிரச்சினை. எல்லா ஆன்மாக்களுக்கு ஒரே மாதிரியான தரத்தில் இல்லை. ஆன்மாக்கள் வெவ்வேறு தரத்தில் வெவ்வேறு பக்குவத்தில் உள்ளன. ஓர் ஆன்மா உயர்ந்த தரத்தில் உள்ளது இன்னொரு ஆன்மா தாழ்ந்த தரத்தில் உள்ளது. இடைப்பட்ட தரங்கள் எத்தனையோ! எல்லா ஆன்மாக்களும் ஒரே பக்குவத்தில் இருந்தால் என்ன ஆகும்? ஏகான்மாவாக ஒன்றாகிவிடும். அது சங்கரர்கூறும் ஏகான்மவாதத்தில் கொண்டுபோய் விட்டு விடும். நல்ல வேளையாக அது அப்படியில்லை. ஆன்மாக்கள் வெவ்வேறு தரத்தில் வெவ்வேறு பக்குவத்தில் உள்ளதற்கு மாறாக ஒரே பக்குவத்திலர் ஒரே தரத்தில் இரக்க முடியாது என்று சைவ சித்தாந்தம் நெடுக சிந்தித்து நிலை நாட்டுகிறது.

பல தரங்கள், பல பக்குவங்கள் இருப்பினும் பொதுவாக அவற்றை மூன்று வகைக்குள் அடக்கிவிடலாம் என்று திருமந்திரத்திலேயே வருகிறது. மூவகை சீசவர்க்கம் என்ற தலைப்பிட்ட இயல் இரண்டாம் தந்திரத்தில் திருமந்திரத்தில் வரும். அவை 1) விஞ்ஞானா கலர் 2) பிரளயாகலர் 3) சகலர்.

விஞ்ஞானாகலர் ஒரு மலம்—அதாவது ஆணவ மலம் மட்டும்—உடையவர்கள். பிரளயாகலர் இருமலங்கள்—அதாவது ஆணவம், கன்மம் என்ற இரண்டு மட்டும்—உடையவர்கள். சகலர் மூன்று மலங்களும்—அதாவது ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களும் உடையவர்கள்.

நாமெல்லாம் சகலர். கலர் என்றால் சோடா, கலர் என்கிறார்களே அந்தக் கலர் இல்லை. கலர் என்றால் பந்தம் உடையவர் என்று பொருள் கட்டுண்டவர் என்று பொருள். அகலர் என்றால் பந்தம் அற்றவர் கட்டு நீங்கியவர். பிரளய + அகலர் என்பது வடமொழி தீர்க்க ச்நதிப்படி பிரளயாகலர் என்றாயிற்று. அதாவது பிரளய காலதர்தில்—உலகம் ஒடுங்கும் ஊழிக்காலத்தில் கலைகள விட்டு நீங்குபவர் என்று பொருள். விஞ்ஞான + அகலர் என்பது விஞ்ஞானா கலர் என்றாயிற்று. விசேட ஞானத்தாலே ஒரு மலமாகிய ஆணவத்தின் கட்டக்களினின்றும் நீங்குபவர் என்று பொருள். சதாசிவர்கள் என்று கூறப்பட்டவர்கள் விஞ்ஞானாகலர் என்ற பக்குவத்தில் உள்ள ஆன்மாக்கள். இவர்கள் மேல் தரத்தில் உள்ளவர்கள்.

முதன்முதலில் இறைவன் உலகைப் படைக்க ஆரம்பிக்கும் போதே ஒரே ஒரு மலம் மட்டும் உடைய சதாசிவர் பக்குவத்தில் சில ஆன்மாக்கள் இருக்கும். அவர்கள் சம்புபட்சத்து சதாசிவர் எனப்படுபவர். அதாவது நேரடியாக ஐ.ஏ.எஸ். அதிகாரியாவதைப் போல இயற்கையாகவே அந்தப் பக்குவத்தில் உள்ளவர்கள். இதற்கடுத்து பல பிறவிகளில் புகுந்து பறிவ நெறியில் தேறி மேலே பக்குவத்தில் ஏறி அதன்பின் ஒருமரம் மட்டும் உடையவர்களாக ஆனவர்கள் அணுபட்சத்து சதாசிவர்கள். ஆகையால் சதாசிவர்களில் அணுபட்சத்து சதாசிவர்களை விட சம்புபட்சத்து சதாசிவர்கள் சீனியர்கள்—அதாவது மூத்தவர்கள்.

இந்த சம்புபட்சத்து சதாசிவர்கள் தங்களுக்குள் ஒரவருக்கொருவர் பேசுவதற்காக இறைவன் ஒரு மொழியை கற்பித்தானாம். அந்த மொழி எது தெரியுமா? அது தான் தமிழ்! ஆ! தமிழ் எவ்வளவு உயர்ந்த மொழி! பலபேர் சொல்கிறார்கள்—வடமொழி தேவபாஷை என்கிறார்கள். ஒப்புக் கொள்கிறோம். திருமால், பிரமன், இந்திரன் முதலான தேவர்கள் கீழ்நிலையில்—அதாவது குண தத்துவத்தில் அல்லது அதற்குக் கீழ் உள்ள உரிய தத்துவங்கிளல் இருப்பவர்கள். இவர்களுடைய பாஷை தேவபாஷை—அதாவது வடமொழி. நம்முடைய தமிழ்மொழியோ, இதற்கு மேல் பல படிகள் மேலாக உள்ள சதாசிவர்களின் பாஷை.

எனவே தமிழ் சதாசிவர் மொழி என்று நானாக சொல்லவில்லை. ஆகமம் சொல்கிறது—தமிழகாமம் சொல்கிறது. தமிழ் என்ற தலைப்பிட்ட கட்டுரையில் இதனை வள்ளலாரும் கூறுகிறார்.

பெரியோர்களே! சதாசிவ தத்துவம் என்பது சிவதத்துவம் ஐந்தில் இடைநடுவில் இருப்பது. உலகை ஆண்டவன் படைக்கும் முன் ஒடுக்க நிலையில் இருப்பது லய நிலை. அப்போது ஆண்டவனுக்கு உலகிற்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது. அவன் உலகைப் படைக்கும் போது, உடலைப் படைக்கும் போது முதன் முதலில் ஆன்மாக்களுடன் தொடர்பு கொள்வது சதாசிவ தத்துவம் தான்.

அதாவது ஆண்டவன் லயநிலையில் இருக்கிறார் அவன் உலகத்தை உருவாக்க வேண்டும். மாயையை ஒரு பார்வை பார்க்கிறான். இது இப்படியாகட்டும் என்று எண்ணத்தைக் குவித்துப் பார்க்கிறான். இது உன்முகப் பார்வை. ஞானம் மிகப்பார்க்கும் போது அந்த மாயையில் ஒரு பகுதி சிவதத்துவம் ஆகிறது. இதற்கு நாதத்துவம் என்றும் பெயர். ஞானத்திலிருந்து கொஞ்சம் கிரியா சக்தியைக் கூட்டிப் பார்க்கிறான். அந்த மாயில் ஒரு பகுதி சத்தி தத்துவம் ஆகிறது. இதற்கு விந்து தத்துவம் என்றும் பெயர். அடுத்த பார்வை சதாசிவர் பக்குவத்தில் உள்ள ஆன்மாக்கள் வாழும் மாயை உலகைப் பார்கிறான். அதுதான் சதாசிவ தத்துவம். இதை சாதாக்கியம் என்றும் சொல்வார்கள். இறைவன் தொடர்பு கொள்வதால் இது போகநிலை எனப்பட்டது.

எனவே முதன் முதலில் இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் வரும் தொடர்பு எங்கே வருகிறது என்றால் சதாசிவதத்தவத்தில் ஆன்மாக்கள் தொடர்பு கொள்ள வேண்டும் என்றால் மொழி தேவைப்படுகிறது. எனவே ஆண்டவன் தமிழைக் கற்பித்தான்.

இனி வரும் படைப்பை இறைவன் நேரடியாகத் தொடர்பு கொண்டு ஆற்றுவதில்லை. மொழிதான் உருவாக்கப்பட்டு விட்டதே. எனவே அது கொண்டு சதாசிவத்திற்கு ஆணையிட, சதாசிவம் தமக்கு கீழ் உள்ள அதாவது அடுத்த நிலையில் உள்ள பக்குவ ஆன்மாக்களைக் கொண்டு ஏனைய தத்துவங்களைப் படைக்க உலகம் உருவாகிறது உடல் உருவாகிறது. இங்கே சதாசிவம் மகேஸ்வரனையும்,மகேசுவரன் இதைப்படை அதைப் படை என்று ஏவ ருத்ரன், மால், அயன் போன்றோர் அவரவர்க்கு உரிய தத்துவங்களை விரிப்பதால் இதற்கு அதிகார நிலை என்று பெயர்.

எனவே இறைவனுக்கே மூன்று நிலைகள் உண்டு. அவை 1) லயம் 2) போசும் 3) அதிகாரம்.

இதில் இறைவனுடைய தொடர்பு மாயையில் சிவதத்துவத்திலிருந்து தொடங்கி ஆன்மாக்களில் சதாசிவர் வரை இருக்கிறதே அது தான் போக நிலை. அதன் பின்னர் எல்லாம் அதிகார நிலை.

ஆக வரும் இச்சை அறிவியற்றலால் இலய

போக அதிகாரப் பொருளாகி

என்பது கந்தர் கலிவெண்பா வாக்கு.

சிவதத்துவம் ஐந்தில் சிவதத்துவம், சத்திதத்துவம், சதாசிவதத்துவம் மூன்றும் போக நிலை. ஏனைய ஈசுர தத்துவம் மற்றும் சுத்த வித்யா தத்துவம் இரண்டும் அதிகார நிலை. இந்த ஐந்து தத்துவங்களில் சதாசிவரே முதல் வகை ஆன்மாக்கள். அவர்கள் தமிழில் ககட்டளை இட ஏனைய மகேசுரர்கள், சுத்தவித்தை தத்துவத்தில் வாழும் ஆன்மாக்கள் இந்த உலகை விரிக்கினறன. எனவே சிவ தத்துவம் ஐந்திலும் பரவி உள்ள மொழி தமிழ்மொழி. இதன் காரணமாகத் தான் அநத் ஐந்து தத்துவத்தையும் தமிழ் மண்டலம் என்று கூறினாார் திருமூலர்.

சதாசிவர்கள் மொழி தமிழ் என்பது தெளிவாயிற்று. அவர்களுக்கு உள்ள வேதம் முததமிழ் வேதமாகத் தான் இருந்ததாம். இதையே சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம் என்றும் திருமூலர் பாடினார்.

என்னிடம் உள்ள பழைய திருப்பனந்தாள் காசிமடப் பதிப்பில் திருமூலர் வரலாறு என்ற தலைப்பில் பாயிரத்தில் 76அவது பாடலாக சதாசிவம் தத்துவம் முத்தமிழமூ வேதம் என்ற தொடங்குகின்ற பாடல் வருகிறது. பளாய பதிப்பிற்கும் புதிய பதிப்பிற்கும் பாடல் எண்ணிக்கை மாறிவிடும்.

அது ஒரு புறம் இருக்கட்டும்! நம்பிரான் திருமூலர் தெளிவாக சொல்லிவிட்டார். வேதம் இருந்தது முதன் முதல் வேதம் தமிழ் வேதமாக இருந்தது அதிலும் முததமிழ் வேதமாக இருந்தது. இதுதான் திருமூலர் கருத்து.

எனவே திருமூலர் சிறப்புமிக்க வேதத்தைப் பற்றிக் கூறும் போதெல்லாம் தமிழ்வேதத்தையே எடுத்துக் கூறினார் எனபதற்கே இதுவே சான்று. திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரை எழுதும்போது எப்படி ஆசிரியர் கருத்திற்கு மாறாமல் முரண்படாமல் உரை எழுதினா ரோ அதைப் போல திருமூலர் கருத்திற்கு மாறாக நாம் உரை கொள்ளாமல் அவர் எங்கெங்கே வேதச் சிறப்பு என்று பாடுகிறாரோ அங்கெல்லாம் அதை தமிழ்வேதச் சிறப்பாகவே கொள்ள வேண்டும். மாறாக வடமொழி வேதத்தை எடுத்துக் கூறி உரை எழுதினால் நாம் திருமூலர் கருத்திற்கு மாறாக போய்விட்டோம் என்று பொருள்.

யாராவது சிலர்க்கு வேதம் என்றால் வடமொழி வேதத்தையே குறிக்கும் என்று மாற்றுக் கரத்து இருக்குமானால் அது தவறில்லை. அவர்கள் திே தனியே இன்னொரு மேடை போட்டு பேசிக் கொள்ளலாம். ஆனால் திருமந்திரத்தைப் போற்றிக் கொ்ணடே திருமூலர் கருத்திற்கு மாறாகப் பேசுவரை மட்டும் செய்ய வேண்டாம் என்ற அவர்கள் திருவடியைப் பற்றிக் கேட்டுக் கொள்கிறேன். அது திருமூலருக்கு செய்யும் பச்சைத் துரோகமாக முடியும்.

எனவே தமிழ் மண்டலம் ஐந்தும் தாவிய ஞானம் என்று தொடங்கும் பாடலாலும் சதாசிம் முத்தமிழ் வேதம் என்ற தொடங்கும் பாடலாலும் கிரியைகளைத் தமிழில் செய்வதற்கு திருமந்திரம் நமக்கு அதிகாரத்தைக் கொடுக்கிறது.

ஆகமப்படி கிரியை செய்ய வேண்டும் என்றால் தமிழினால் செய்யலாம் என்பது ஒன்று தமிழே சிறந்தது என்பது தான் உண்மை. தமிழ் சதாசிவ தத்தமாக ஆண்டவனை நெருங்கியுள்ளது. எனவே அதை வைத்து கிரியைகளைச் செய்தால் ஆண்டவனோடு நமக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட பொருந்திய அருளை பெறலாம் என்பது திண்ணம்.

கிரியைகளை எப்படி செய்ய வேண்டும்? என்பது அடுத்த கேள்வி. ஆகமம் ஒன்பதும் முப்பேதமுற்று 28 ஆகமமாயிற்று என்று நேறடறு பார்த்தோம். ஒன்பது ஆகமத்திற்கு ஒன்பது தந்திரம். ஒவ்வொன்றும் கருமகாண்டம், உபாசானா காண்டம், ஞானகாண்டம் என்று முப்பேதமாக பிரிந்தது என்றோம். எனவே ஒவ்வொரு ஆகமத்திலும்—அதைச் சார்ந்த ஒவ்வொரு தந்திரத்திலும் கிரியை முறைகள் கூறப்பட்டுள்ன. அவற்றைப் பகுத்து பிரித்து அறிந்து பயன் கொள்வது நம்முடைய கடமை. இதுவரை அப்படிப் பிரித்த பகுதிகளைக் கொண்டு பதிப்பித்த செம்பதிப்பு வரவில்லை.

என்றாலும் திருமந்திரத்தில் கூறப்படுகின்றன ஒரு சில கிரியை முறைகளை இனி பார்ப்போம்.

திருமந்திரத்தில் எல்லாக் கிரியைகளுக்கும் பாடல்கள் உண்டு. ஒன்றல்ல இரண்டல்ல. அநேகமாக இங்கு இருப்பவர்கள் எல்லோரும் குறிப்பு எடுப்பதால் ஒவ்வொரு முறையும் பாடல்களை அவற்றின் எண்ணிக்கையோடு கூறுகிறேன். எல்லார்க்கும் இது பயனாகும்.

முதலில் கணபதி வழிபாட்டை எடுத்துக் கொள்வோமானால் ஏற்கனவே முதல் நாள் சொற்பொழிவில் சொன்னது போல விநாயகர் வணக்கம் பற்றியோ, அவர்க்குரிய வழிபாட்டுக் கிரியைக்கு என்று தனியே

பாடல்கள் இல்லை. பொதுவாக உள்ள பாடல்களையே இந்த வழிபாட்டிற்கும் கொள்ள வேண்டும். முருகனுக்கு என்ற 3 பாடல்கள் உண்டு. லட்சுமி பற்றி, சரஸ்வதி பற்றி, அம்பிகைப் பற்றி அநேக பாடல்கள் உள்ளன.

நாம் 12 திருமுறை என்று கூறுகிறோம். அந்த 12 திருமுறையிலேயே திருமுறை என்ற பெயரும் அதற்குத் துதியும் திருமந்திரத்தில் தான் உண்டு. பாடலைப் பாருங்கள்.

ஏடங்கை நங்கை இறையெங்கள் முக்கண்ணி

வேடம் படிகம் விரும்பும்வெண் தாமரை

பாடுந் திருமுறை பார்பதி பாதங்கள்

சூடுமின் சென்னிவாய் தோத்திரம் சொல்லுமே.

—நாலாந் தந்திரம் 1067ம் பாடல்.

கணநாதர் புராணத்தில் சேக்கிழார் திருமுறை என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். பின்னால் இதுதான் திருமுறையாக ஆகப்போகிறது என்பதை தீர்க்க தரிசனமாக முன்னாலேயே கண்டு சொல்லியிரக்கிறார்கள். திருமுறை எழுதுவோர், திருமுறை வாசிப்போர் என்றெல்லாம் கணநாதர் பயிற்சி கொடுத்தார் என்று பெரியபுராணம் சொல்கிறது. சேக்கிழாராவது நம்பி ஆண்டார் நம்பிக்கு பின் வந்தவர். எனவே திருமுறை வகுக்கப்பட்ட பின் சேக்கிழார் திருமுறை என்ற சொல்லைப் பயன்படுத்தி இருக்கலாம். ஆனால் திருமூலர் காலமோ கி.மு. 5500 என்று தருக்க இயல்படியும் விஞ்ஞானரீதியாகவும் நிலை நாட்டினோம். பிற்காலத்தில் இது திருமுறை என அழைக்கப்படப் போகிறது என்று அப்போதே சொன்னார் என்றால் எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது! எவ்வளவு பாராட்டப்பட வேண்டிய விஷயம் இது!

இந்தப் பாடல் திரிபுரை சக்கரத்தில் வருகிறது. எம்பிராட்டி மலைமகளாக இருக்கிறாள் அவளே அலைமகளாக இருக்கிறாள் அவளே கலைமகளாகவும் இருக்கிறாள். மூவுருவும் ஒருருவமாக இருக்கிறாள். அதனால் தான் திரிபுரை என்று பெயர் வந்தது. அதனால் அதில் அம்பகை—அதாவது மலைமகளாக வைத்துப் பாடுகிற பாடல் உண்டு. அப்படியே அலைமகளாக நினைத்தும் பாடுகிறார். உடன் கலைமகளாக வைத்தும் பாடுகிறார். இந்தப் பாடல் கலைமகளை நினைத்து பாடிய பாடல். பார்வதியே தான் வேறு வடிவில் கலைமகளாக வந்துள்ளாள். ஏடு அங்கை நங்கை அதாவது சரஸ்வதி. அவள் தனியாக இல்லை. பார்வதியே வேடம் போட்டு வெள்ளையாக வந்திருக்கிறாள். இவளை வெண்தாமரையில் அமர்ந்திருக்கும் பார்வதி என்று கூறலாம் பராசக்தி என்று கூறலாம்.

அம்பிகையின் இரு பாதங்களும் ஞான வடிவானழ. ஒன்று பரஞானம் மற்றொன்று அபரஞானம். இது எல்லாம் உருவகம் தானே. திருவடியைக் கொடு என்று எல்லா அடியார் பெருமக்களும் ஆண்டவினிடம் வேண்டுவது வழக்கம் தானே. அப்படி வேண்டுவது ரு உருவகம் தானே. அது இல்லாமல் திருவடி கொடு என்றால் இத்தனை பேருக்கும் திருவடியை பீஸ் பீஸாகக் கட் பண்ணியா கொடுப்பார்? எனவே அது உருவகம். ஞானத்தை உருவகித்து அப்படிக் கூறினார்கள். திருவடியைக் கொடுன்னா ஞானத்தை கொடுன்னு பொருள். ஒரு திருவடி பரஞானத்தைக் குறிக்கும் மற்றொன்று அபரஞானத்தைக் குறிக்கும். இறைவனது திருவடியை அடைவிப்பது பரஞானம். இந்த உலகத்தினை எப்படித்தன் வசப்படுத்துவது என்பது அபரஞானம். உதாரணத்திற்கு நான் எஞ்சினியரிங் படித்துள்ளேன். அதோடு முடிந்துவிடாது. அது ரிடையர் ஆகற வரைக்கும் உதவும். அதன் பின்னாலே ஆண்டவனை நோக்கி மனம் ஓடி அவன் பாதத்தில் பெறும் அமைதியை —அமைதி இனப்ததை நோக்கிப் போவேன். அதே மாதிரி கெமிஸ்ட்ரி படித்த ஒரு பட்டதாரி. அந்த ஞானம் உதவுகிற வரையில் ஒரு வேலைக்குச் சேர்வான். வேலையிலிருந்து ஓய்வு

பெற்றுவிட்டால் அந்த ஞானமே எல்லாம் என்று சொல்லிவிட முடியாது என்பது புரியும். அதற்கு மேலே அதன் மீது உவர்ப்பு தோன்றி அவன் மெல்ல மெல்ல அருள்நெறிக் கூட்டத்திற்குத் தள்ளப்படுவான். மெல்ல மெல்ல சைவ சித்தான்நதம் வரும் மெல்ல மெல்ல சிவஞான போதம் மீது நாட்டம் வரும். அது அபரஞானத்தின் மணிமுடி. அங்கே அபரஞானமாக இறைவன் யார்? இந்த உடலைத் தந்தவன் யார்? அவனது இலக்கணம் என்ன? அவனை அடைவதற்கு உரிய சாதனம் என்ன? அதனால் அடையும் பயன் என்ன? என்பது விளங்கப்படும். இதையெல்லாம் எடுத்துச் சொல்வதும் அபரஞானம் தான். உண்மையிரேயே இறைவனை அடையும் அருள்நெறிப் பயிற்சியில் புகுந்து முதிர கடைசியில் இதோ நீ தேடிவந்த இறைவன் இவன் தான் என்று எது காட்டுகிறதோ அதுவே பரஞானம்.

இந்த இரண்டையும் ஒரே நேரத்தில் பெற்றாராம் சீர்காழியில் சுமார் 1300 வருடங்களுக்கு முன் பால்சாப்பிட்ட அந்தக் குழந்தை. உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம் இரண்டும் பெற்றாராம் சம்பந்தர். இந்த இரண்டு ஞானமும் பார்வதியின் பாதங்கள் என்று இந்தப் பாடலில் சொன்னார் திருமூலர். பாடுந் திருமுறையே பார்வதியின் பாதங்கள் என்றார்.

பலபேர் என்ன சொல்றாங்க? சார்! திருமுறை தமிழ் எல்லாம் பழங்கால தமிழ் அதைப் பதம் பிரித்துப் படிக்கிறது ரொம்பக் கஷ்டமாயிருக்கு.

திருமூலர் சொன்னார் நீ ஒன்றும் செய்ய வேண்டாம். உள்ளே இருப்பதைப் படிக்கத் தெரியாவிட்டாலும் பரவாயில்லை. நீ பாட்டுக்கு திருமுறையதைத் தலையில வச்சுக்கோ. உன்வாய் தானாக அந்த திருமுறை தோத்திரங்களை அணிச்சை செயல் போல பாட ஆரம்பித்து விடும்.

பாடும் திருமுறை பார்ப்பதி பாதங்கள்

சூடுமின் சென்னி வாய் தோத்திரம் சொல்லுமே

ஈடு இணையற்ற பாடல். இந்தப் பாடலைப் பாடி திருமுறைகளை வணங்கலாம். திருமுறைகளை அடுக்கி யானைமேல் வைத்து உலா வருவது உண்டு. அதற்கு முன் திருமுறைகளுக்கு ஆசனமிட்டு, பட்டிட்டு, பொட்டிட்டு. பூவிட்டு, மாலையிட்டு, தீபாராதனை செய்வது திருமுறை அன்பர்கள் வழக்கம். அப்போது ஏன் மௌனமாக வழிபட வேண்டும்? திருமுறைகளை வணங்க திருமுறையிலேயே நமக்குப் பாடல் கிடைக்கிறது.

இந்தப் பாடலைச் சொல்லி திருமுறைகளுக்குச் பூச் சொரிந்தால் திருமந்திரத்தின் பலன் கிடைக்காதா என்ன?

திருமூலர் ஒவ்வொரு கிரியைக்கும் ஒரு பாடல் பாடியுள்ளார். பாருங்கள்! திருமுறை வணக்கத்திற்கே ஒரு பாடலைப் பாடியுள்ளளார்! அதை வைத்து நமது கால ஆராய்ச்சிப் புலிகள், ஆகவே திருமுறைகள் வகுக்கப்பட்ட காலமான 10 ஆம் நூற்றாண்டிற்கு பிற்பட்டவர் திருமூலர் என்று தாண்டிக் குதித்தாலும் ஆச்சரியப்படு வதற்கில்லை. இந்தியாவிற்கு சுதந்திரம் வருவதற்கு முன்னே மகாகவி பாரதி ஆனந்த சுதந்திரம் இடைந்து விட்டோம் என்று ஆடுவோமே, பள்ளு பாடுவோமே என்று பாடினால் அது தீர்க்க தரிசனம்! ஆனால் அந்த தீர்க்க தரிசனம் திருமூலருக்கு மட்டும் கிடையாதாம்! பாவம்! அவர்களை விட்டு விடுவோம்.

பல நூற்றாண்டுகளுக்குப் பின்னால் திருமுறைகள் வகுக்கப்படப் போகின்றன என்பதை ஞானக் கண்ணால் காண முடியாதவரா திருமூலர்? அவர் திரிகால ஞானியல்லவா? அவர் எதைப் பாடவில்லை? தொட்டில் போடுவது முதல் ஈமச்சடங்கு வரை எல்லாச் சடங்குகளுக்கும் திருமந்தரத்தில் பாடல் உண்டு. ஈமச் சடங்கு என்று எடுத்துக் கொண்டோமானால் யார் யாருக்கு எப்படியெப்படி செய்ய வேண்டும்? யாரை

எரிக்கணும்? யாரைப் புதைக்கணும்? யாருக்கு அடக்கம் செய்யணும்? ஒரு பிரம்மச்சாரிக்கு. ஒரு அருளாளரக்கு என்று தனித்தினயே கிரியை முறைகளைக் காட்டிப் பாடல்கள் பாடியுள்ளார் திருமூலர்.

ஒரு மாகேசுவர பூசை எப்படி செய்யனும்? ஒரு சுமங்கலி பூசை எப்படி செய்யணும்? அத்தனையும் பார்க்க பார்க்க, படிக்க எத்தனை ஆச்சரியமாக இருக்கிறது? எவ்வளவு பெரிய பொக்கிஷம் இந்த நூல்? என்ற எண்ணம் தோன்றாமல் இராது. ஆனால் இவ்வளவு பெரிய பொக்கிஷத்தை நாம் இந்நாள் வரை சரிவர வாழ்வியலில் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பது மிகவும் வேதனை தரும் விஷயம்.

ஒரு உதாரணம் சொல்கிறேன். எல்லோருடைய வீட்டிலும் பிதாமகர்களுக்கு—இறந்த பெரியவர்கட்கு நிதி கொடுப்பது உண்டு. அன்று மூதாதையர்களை வணங்கும் நாள். அன்று வேள்வி ஏதாவது செய்ய வேண்டுமா? சடங்குகள் என்னென்ன செய்ய வேண்டும்? ஐயங்கள் தோன்றும். அந்தச் சடங்கிற்கு உரிய— அந்தக் கிரியைக்கு உரிய திருமந்திரப் பாடல் ஒன்று சொல்கிறேன்.

வளர்பிறையின் தேவர் தம்பாலின் மன்னி

உளரொளி பானுவின் உள்ளே ஒடுங்கி

தளர்வில் பிதிர்ப்தம் தங்கி சசியுள்

உளதுறும் யோகி வுடல் விட்டால்தானே!

குறித்துக் கொள்ளுங்கள்! பாடல் எண்ணிக்கை 1902 (கூட்டத்தில் பலர் திருமந்திரப் புத்தகத்திலும் சிலர் நோட்டுப் புத்தகத்திலும் குறித்துக் கொள்கிறார்கள்)

இந்த ஒரு பாடலுக்கே விரிவுரை செய்ய அரண்டு மணி நேரம் தேவைப்படும். பாடல் பாடலாக இந்த மாதிரி விரிவுரை செய்தால் சில மாதங்கள் ஆகும். அது இந்த எனது மலேசியப் பயணத்தில் இயலாது. வேறு ஒரு முறை நான் மலேசியாவிற்கு வரும் போது இன்னும் விரிவாகப் பார்க்கலாம். எப்போது நான் மீண்டும் மலேசியா வருவது? இது இறைவன் திருவருள். எனவே இப்பொழுது சொன்ன பாடலுக்கு உரிய உரையையும் பொருந்திய பொருளை மொழிப் பாகவும் சுருக்கமாகவும் சொல்லுகிறேன்.

பெரியோர்களே! நாம் நம்முடைய மூதாதையர்களுக்கு உரிய நாளை திதி என்று கூறுகிறோம். ஆனால் நாயன்மார்களுக்கு திதிஎன்று சொல்வதில்லை, ஏன்? இங்கே யாராவது சொல்வீர்களா? (கூட்டத்தினர் அமைதியுடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கிறார்கள்.)

சரி! நானே சொல்லி விடுகிறேன். உங்கள் சார்பாக நானே சொல்கிறேன். நாயன்மார்களைப் பொறுத்தவரையில் அவரவர்க்குரிய நட்சத்திரத்தில் தான் குருபூசை செய்கிறோம்.

ஞானசம்பந்தருக்கு வைகாசி மூல நட்சத்திரத்தில் குருபூசை. அப்பருக்கு? இதைப்பற்றி ஒரு பழம் பாடலே உண்டு.

பாடிய சம்பந்தர் வைகாசி மூலம் பயிலுமப்பர்

நீடிய சித்திரை மாதச்சதயம் நிறைவன்றொண்டர்

ஆடியிற் சுவாதி திருவாதவூரர் நல் ஆனிமகம்

தேடிய சேக்கிழார் வைகாசி பூசம் சிறந்தனரே

இந்தப் பாடலை எல்லாம் அந்த காலத்தில் பஞ்சாங்கத்தில் போட்டிருப்பார்கள். இப்பவும் சில பஞ்சாங்கப் பதிப்பில் போடப்படுகிறது. ஆனால் இந்த காலத்தில் யார் பஞ்சாங்கம் வாஙகுகிறார்கள்? (கூட்டத்திலிருந்து ஒருவர் அவரவர் நட்சத்திரங்களை மீண்டும் சொல்லுங்கள் எ்று கேட்டக்கொண்டு கறித்துக் கொள்ள தயாராகிறார்)

மீண்டும் சொல்கிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| சம்பந்தர் | – | வைகாசி | – | மூலம் |
| அப்பர் | – | சித்திரை | – | சதயம் |
| சுந்தரர் | – | ஆடி | – | சுவாதி |
| மாணிக்கவாசகர் | – | ஆனி | – | மகம் |
| சேக்கிழார் | – | வைகாசி | – | பூசம் |

நன்றாக கவனிக்கவேணும். இவர்களுக்கு மட்டும் நட்சத்திரம் குறிக்கிறோம். நம் பெரியோர்களுக்கு திதி என்கிறோம். திதி என்பது தான் மருவி தேதி ஆயிற்று. நம்முடைய பூமிக்கும் சந்திரனுக்கும் உள்ள தூரத்தில் பாதி திதி ஆகும். பூமியை சந்திரன் சரியான வட்டமாகச் சுற்றுவதில்லை. நீள்வட்டமாக முட்டைவட்டமாக சுற்றுகிறது. எனவே சந்திரனுக்கும் பூமிக்கும் உள்ள தூரம் ஒவ்வொரு நாளும் மாறும். சந்திரனுக்குப் பதினாறு கலைகள் அதற்கேற்ப திதி மாறும். முதலில் அமாவாசை அடுத்த நாள் பிரதமை அடுத்த நாள் துதியை... என்பது போல. கலைகள் ஒவ்வொன்றாக குறையும் போதும், கூடும் போதும் திதியும் குறையும் கூடும். இதை பூர்வபட்சம் மற்றும் அமரபட்சம் என்பார்கள்.

நம்முடைய பெரியவர்களின் ஆன்மாக்ககள் இந்த உலகிலே இருந்து மறைந்து மேலே செல்லுமானால் அந்த ஆன்மாக்கள் செல்லுகின்ற இடம் அதிக பட்சம் சந்திர மண்டலத்தைச் சுற்றித்தான் இருக்கும். அதற்கு மேல் போகாது.

எனவே தான் தளர்வில் பிதிர்ப்பதம் தங்கி சசியுள் உளதுறும் என்றார், இப்ப சொன்ன திருமந்திரப் பாடலில் சசி–சந்திரனைக் குறிக்கும். பிதிர்ப்பத்தில் தங்கி சந்திர மண்டலத்தில் பெரியோர் ஆகிய நம்மூதாதையர் இருப்பர் என்பது பொருள்.

அதற்கு முன் வரியில் உளரொளி பானுவின் உள்ளே ஒடுங்கி என்றார். அதன் பொருள் உயிர்கள் பானுவாகிய இந்த சூரிய மண்டலத்திற்குள்ளாகவே இருக்கும் என்பது பொருள். சூரியனைச் சுற்றி கிரகங்களும் பூமியும் உள்ளன. பூமிக்கு உபகிரகம் சந்திரன். இவையனைத்தும் நாம் பார்க்கின்ற சூரியனின் மண்டலமாகும். நமத பெரியோர்களின் உயிர்கள் சூரிய மண்டலத்தற்குள்ளாகவே இருக்குதட. அதிலும் சூரிய மண்டலத்தின் ஒரு பகுதியான சந்திர மண்டலத்தில் பிதிர்ப்பதத்தில் தங்கும் என்பது பொருள்.

ஆனால் நாயன்மார்களோ நட்சத்திர மண்டலங்களில் இருப்பவர்கள். ஒவ்வொரு நட்சத்திரமும் ஒவ்வொரு சூரியன் என்பார்கள். நாயன்மார்கள் நாம் காணும் சூரியனையும் அதைச் சுற்றியுள்ள சூரிய மண்டலத்தையும் தாண்டிச் செல்கிறவர்கள். அவர்கள் ஒளி மண்டலத்திலே வாழ்கிறார்கள். நாம் வாழும் ஒளி மண்டலத்தை நோக்க இருள் மண்டலத்திலே இருக்கிறவர்கள் என்றாலும் மிகையில்லை.

சந்திரமண்டலத்திலே வாழும் நம்பெரியோர்கள் அந்த மண்டலத்திற்கு மேல் போக முடியாது. அதற்கு மேல் போகணம்னா உரிய அதிகார தேவர்களின் அனுமதி வாங்கித் தான் அவரவர் நற்பயனுக்கேற்ப மேலே போக முடியும். இதைத்தான் வளர்பிறையின் தேவர் தம்பாலின் மன்னி என்றார் திருமூலர். அங்கே சில அதிகார தேவர்கள் உண்டு. அவர்கள் பால் மன்னி என்றால் அவர்கள் பால் பொருத்தி என்று பொருள்.

இதையெல்லாம் நான் விளையாட்டிற்காகவோ பிரமிப்பூட்ட வேண்டுமென்றோ இட்டுக் கட்டிச் சொல்லவில்லை. இதை நன்கு பலமுறை சோதித்துத்தான் சொல்கிறேன்.

இதை ஆவிகளுடன் தொடர்பு கொண்டு ஒரு கேசுக்கு பத்து கேசாகப் பார்த்து கேஸ்ஸ்டடி என்று ஆங்கிலத்தில் கூறுவார்களே அப்படிச் சோதித்ததுப் பார்ததுத் தான் சொல்கிறேன். அவர்கள் எல்லாம் சந்திரமண்டல எல்லை வரை தான் போகிறார்கள். அதற்கு மேல் போவதில்லை. அதற்கு மேல் போக வேண்டுமானால் அது அருளாளர்களால் தான் முடியும். அவர்கள் சூரியமண்டலத்தில் வீற்றிருப்பார்கள். இதை மகாதேஜோ மண்டலம் என்பார் பாம்பன் சுவாமிகள்.

என்னுடைய நண்பர் ஒருவர் சென்னையில் வண்ணாரப்பேட்டையில் இருந்தார். திருமுறையில் ஈடுபாடு உண்டு. ஆனால் அதை தினமும் அநுட்டிப்பதில்லை. நான் தூண்டி விட்டால் என்பொருட்டு திருமுறைப் பெரியோர்கட்கு எடுக்கும் விழாக்களுக்குப் பணம் உதவுவார். ஏனென்றால் வியாபாரத்தின் காரணமாக இதில் எல்லாம் நேரடியாக ஈடுபட நேரம் இல்லாததுதான். அவர் ஒரு நாள் இறந்துவிட்டார். ஈமச் சடங்கில் நான் சென்று கலந்து கொண்டேன். அவருக்கு 3 மகன்கள். அவர்கள் உத்திரக்கிரியை பத்திரிகை எழுதித்தரச் சொன்னார்கள். நான் உத்திரகிரியை பத்திரிகையில் இன்னார் இத்தனை நாள் அநாய் வாய்ப்பட்டு குறிப்பிட்ட நாளன்று சிவலோக பதவி அடைந்தார் என்று எழுதினேன். அதைப் படித்து பார்த்த மூத்த மகன் அதில் சிவலோகபட பதவின்னு எழுதி இருக்கீங்களே அதை எடுத்துடுங்க என்று சொன்னான். ஏம்பா? என்று கேட்டேன். ஏன்னா என்னுடைய அப்பாவைப் பற்றி எனக்குத் தெரியும். அவர் நிச்சயம் அங்கெல்லாம் போக மாட்டார் என்றான். (கூட்டத்தினர் எல்லோரும் சிரிக்கிறார்கள்)

இது வேடிக்கையாக இருந்தாலும் இதில் உண்மை ஒளிந்து கொண்டிருக்கிறது. நாம் ஒரு உபசரணைக்காவும், நாகரிகம் கருதியும் யாராய் இருந்தாலும் சிவலோக பதவி அடைந்தார் என்று எழுதினாலும். உண்மை அதுவல்ல. நம்மால் ஓர் மேல் போக முடியாது. நமக்கென்று ஓர் எல்லை உண்டு. அடுத்த பிறவி எடுக்கும் வரை சந்திர மண்டல எல்லைக்குள் சுற்றிக் கொண்டிருப்போம். ஏனென்றால் நமக்க அருளாற்றல் இல்லை.

எனவே இன்னாருடைய மகன், அப்பா, தம்பி, உறவினர் என்று திதியைச் சொன்னால் தான் ஆண்டவனின் தூதுவர்கள் அவர்களை நம் வழிபாட்டில் கலந்துகொள்ள அனுப்ப ஏதுவாகும். இங்கே நம்ம முகவரி திதிதான். நட்சத்திரத்தைச் சொன்னால் அவர்கள் அந்தக் குறிப்பிட்ட நட்சத்திர மண்டலத்தில் இருக்கப் போவதில்லை. எனவே முகவரியாளர் இங்கு காணப்படவில்லை என்று நமது வழிபாடு நமக்கே திருப்பிவிடப்படும். அவர்கள் வந்து ஆசிபுரிய இடமே இல்லை.

ஆனால் ஞானசம்பந்தரை வைகாசி மூலத்தில் பக்தர்கள் கூப்பிடுகிறார்கள் என்று சொன்னால் அவரிடம் உரிய தேவர்கள் பணிந்து அதனைச் சொல்லி விடுவார்கள். ஞானசம்பந்தரும் உடனே வந்து அருள்புரிவார் அப்படிப் பல பெரியோர்களுக்கு ஞானசம்பந்தர் அருள்புரிந்திருக்கிறார். அவர்களில் ஒருவர்தான் நேற்று நாம் பார்த்த கண்ணுடைய வள்ளலார்.

இதனால் தான் பெரியோர்களே! நம்முடைய பெரியோர்களை திதியைக் குறித்துக் வழிபடுகிறோம். நாயன்மார்களை நட்சத்திரத்தைக் குறித்து வழிபடுகிறோம்.

இனி திதியை எப்படிச் செய்ய வேண்டும்?

உளரொளி பானுவின் உள்ளே ஒடுங்கி

தளர்வில் பிதிர்ப்பதம் தங்கி சசியுள்

என்பது திருமந்திரப் பாடல் வரிகள். அதாவது நம் கண்ணுக்குப் புலப்படும் சூரியனுடைய எல்லைக்குள்ளாக அதன் கதிர் வீச்சில் உள்ள சந்திரமண்டல எல்லைக்கு உள்ளாக என்று முதலில் இடத்தை தெளிவாகக் குறிப்பிட வேண்டும். இதுபோலத் தான் ஆகம மந்திரங்களை அபரக்ரியா மந்திரங்கள் என்று கூறுவதைப் பார்த்தால் குறிப்பிட்ட ஆன்மாவைச் சூரியனிடத்தில் கொண்டு போய் பிறகு பிதிர்ப்பதத்தில் கொண்டு வருவார்கள்.

இது எல்லாம் கிரியை முறைகள். இந்தப் பின்னணியெல்லாம் புரிந்து கொண்டாலர் நமக்காக திதி வழிபாடு செய்து தரும் புரோகிதர்கள் இவற்றையெல்லாம் முறைப்படி செய்கிறார்களா என்று சரிப்பார்த்துக் கொள்ளலாம். ஆனால் நமக்கு இந்தப் பின்னணியும் தெரியாது வடமொழியும் தெரியாது. எனவே மக்களுக்கு ஒன்றும் புரிவதில்லை. முறைப்படி புரோகித்ாகள் செய்கிறார்களா என்பதைச் சரிபார்க்கவில்லையானால் விபரீதம் விளையும். இப்படித்தான் ஒரு விபரீதம் விளைந்தது மறைமலையடிகள் வீட்டில். மறைமலை அடிகளின் வீட்டில் ஒரு திருமணம். பேரனுக்கோ பேத்திக்கோ சரியாக நினைவில்லை. ஐயர் வைத்துத் தான் நடத்த வேண்டும் என்று அவரது அம்மாவோ யாரோ கட்டாயப் படுத்தினார்கள். மறைமலையடிகளும் வேறு வழியின்றி ஒப்புக்கொண்டார். அவர் மூன்று மொழிகளில் வல்லவர். வடமொழி, தென்மொழி, ஆங்கிலம் ஆகிய மூன்று கடல்களின் ஆழம் கண்டவர். அவர் முன்னால் ஐயர் மந்திரம் சொல்ல சொல்ல மறைமலையடிகள் வியர்த்து விறுவிறுத்துப் போனார். காரணம், ஐயர் சொல்லிக் கொண்டு வந்தது கருமாதி மந்திரம். வீட்டில் நடப்பதோ கல்யாணம்.

உடனே ஐயரை நிறுத்தச் சொல்லி இது என்ன என்று கேட்டபோது ஐயர் மலங்க மலங்க விழித்தாராம். இது செவிவழிச் செய்தியாகக் கேட்டது. சற்றுமுன் பின்னாக இருக்கலாம். ஆனால் சம்பவம் நடந்தது உண்மை.

இங்கே பார்த்ததில் மறைமலை அடிகளுக்கு வடமொழிப் புலமை இருந்ததால் புரோகிதரைப் பிடித்தார். நம்மில் எத்தனைபேருக்கு வடமொழி தெரியும்? எத்தனை வீட்டில் இப்படி விபரீதங்கள் நேருகிறதோ, யாருக்குத் தெரியும்?

எனவே ஆன்மாவை சூரியனிடம் காட்டி சந்திர மண்டலத்தில் சேர்த்து திதி வழிபாடு செய்ய வேண்டும். இதை நானாகச் சொல்லவில்லை. திருமந்திரத்தில் சொல்வதைத் தான் நான் சொல்கிறேன்.

திருமந்திரப் பாடலில் தேவர் தம்பாலின்ன மன்னி பிதிர்பதம் தங்கி என்ற வினையெச்சங்கள் உளதுறும் என்ற வினைமுற்றில் முற்றுப் பெறுகிறது. அங்கே கூறப்படும் தேவர் ருத்திரர். இது ஏற்புழிக் கோடாலால் கொண்ட பொருள். அவர்தான் பிதிர்பதத்திற்கு அதிபதி. இந்தப் பிதிர்ப்பதத்தைத் தான் திருவள்ளுவர் தென்புலம் என்று கூறுகிறார்.

திருமந்திரத்திலே சொல்லப்படும் கிரியை முறைகள் எப்படி விஞ்ஞான முறைக்கு ஏற்ப அமைந்துள்ள கிரியை வழிபாட்டு முறைகள் எனபதை அடியேன் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

அதாவது ஒரு வெளி நாட்டுக்காரரை நாம் தொலைபேசியில் தொடர்பு கொள்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதாவது மலேசியாவிலிருந்து சென்னையில் உள்ள ஒருவரைத் தொடர்பு கொள்ள வேண்டும் என்றால் ஐ.எஸ.டி. போடுவோம். அங்கே என்ன நடக்கும்? முதலில் நம்பரைப் போட வேண்டும். அதன் பின் இந்தியாவில் சென்னைக்கு உரிய கோடநம்பர் எதுவோ அதைச் சேர்க்க வேண்டும். அதன் பின்னால் அந்த நம்பரின் குறிப்பிட்ட தொலைபேசி எண்ணைச் சேர்க்க வேண்டும். அப்போது தான் அந்த நம்பருடன் நாம் பேசமுடியும்.

அதுபோல திதி வழிபாட்டில் நாம் குறிப்பிட்ட பெரியவருடன் தொடர்பு கொள்ள வேண்டுமானால் என்ன செய்யவேண்டும்? முதலில் பிரபஞ்ச வெளியில் உள்ள பல சூரியன்களாக உள்ள நட்சத்திரங்களில் ஒன்றான நமது கண்ணுக்குப் புலப்படும் சூரியனைத் தொடர்பு கொண்டு வழிபட வேண்டும். இது சூரியனுக்கு உரிய

கோட் நம்பரைப் போட்டது போல. அதற்குப் பிறகு அந்தச் சூரிய மண்டலத்தில் உள்ள சந்திரமணடலத்திற்க வர சந்திரனை வழிபட வேண்டும். இது சந்திரனின் கோட் நம்பர் போட்டது போல. அதற்குப்பின் பிதிர்ப்பத அதிபதியான ருத்திரர்க்கு என்று தொடர்பு கொண்டு இன்ன திதி இன்ன பெயர் இன்னார் மகன் அல்லது மகள் என்று கூறிவழிபட்டோமானால் அது அவரவர் தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொண்டது போல. உடனே அவர்கள் நம் வழிபாட்டில் கலந்து கொண்டு நம்முடன் நேரடியாகத் தொடர்பு கொள்வார்கள்.

எனவே திருமந்திரப் பாடலை அதாவது வளர்பிறையினர் என்று தொடங்குகிற திருமந்திரப் பாடலை ஓதி நமது பெரியோர்களின் இடத்தை நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும். அதன் பின்னால் அவர்களை மேலும் ஒரு திருமந்திரப் பாடலால் நம்மருகே அழைத்து வைத்து வழிபாடு செய்ய வேண்டும். பாடல் வருமாறு

சிவயோகி ஞானி சிதைந்துடல் விட்டால்

தவலோகம் சார்ந்துபின் தாம்வந்துகூடி

சிவயோக ஞானத்தால் சேர்ந்தவர்நிற்பர்

புவலோகம் போற்றுநர் புண்ணியத்தோரே

இந்தப் பாடல் என்னிடம் உள்ள பதிப்பில் **1905**ஆம் பாட்டு. (அனைவரும் குறித்துக் கொள்கின்றனர்)

பெரியோர்கள் மஞ்சள் பிடித்து வைத்தால் அதில் எழுந்தருளுவார்கள். இது தமிழர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை என்பதற்கு சங்கப் பாடல்கள் சான்று கூறுகின்றன.

சிலர் வீட்டில் நடுவீடு வழிபாடாக ஆயிற்று. மஞ்சளில் வட்டமாக வீட்டின் பூசையறையில் சுவற்றின் ஒரு புறத்தில் இட்டு வைப்பார்கள் வைத்து அதில் மூன்று குங்குமக் கோடுகள் போட்டு மூன்று தலைமுறை பிதிர்க்கள்—தென்புலத்தார் தங்குகிற இடமாகக் காட்டவார்கள் (மூன்று கோடுகள் மூன்று விபூதிபட்டைக்குப் பதிரலாகப் போடுவதல்ல). இங்கே மலேசியாவில் எப்படி என்று எனக்குத் தெரியவில்லை.

ஒரு வீடு என்றால் நடுவீடு வேண்டும். நடுவீடு இருந்தால் தான் வீடு விளங்கும். மூதாதையர் ஆசிர்வாதம் இருந்தால் தான் குலம் விளங்கும். குலம் விளங்க வேண்டுமானால் நடுவீடு என்று ஒன்று அமைக்க வேண்டும். அது ஓரமாக இருந்தாலும் அதற்குப் பெயர் நடுவீடு தான். காரணம் அந்த வீட்டின் மையமே அதுதான். அதாவது அந்த வீட்டாரின் நல்வாழ்விற்கு அந்த வீட்டாரின் மூதாதையர்களின் ஆசியே மையமல்லவா? அதனால் தான் அது நடுவீடு. நடுகல் என்பதில் நடுகின்ற கல் என்பது பொருள் செய்யக் கூடாது.

இனி, பெரியோர்களை இதற்க முன்னாக அவரவர்க்கு உரிய நாளில் மஞ்சள் கூம்பிலோ சந்தனக் கூம்பிலோ ஏதாவது ஒன்றில் அழைக்கலாம். நீங்கள் எவ்வளவு விருப்பமாக இதைச் செய்கிறீர்களே அவ்வளவு சீக்கிரத்தில் அப்பெரியோர்கள் அங்கே வந்து சேர்வார்கள். உன்னுடைய யோக ஞானம் எவ்வளவு இருக்கிறதோ அதற்கேற்ப சீக்கிரம் வந்து சேர்வார் என்பதை சிவயோக ஞானத்ததால் சேர்ந்தவர் நிற்பர் என்று திருமூலர் பாடினார். யோகம் என்றால் ஒன்றுதல். ஒன்றியிருந்து நினைமின்கள என்றார் அப்பர். அது எல்லா வழிபாட்டிற்கும் பொருந்தும்.

வடமொழியில் இதைச் சிரார்த்தம் என்றார்ககள். சிரத்தையோடு செய்வதே சிரார்த்தம். எவ்வளவு சிரத்தையோடு செய்கிறோமோ அவ்வளவிற்குப் பலன் கிடைக்கும்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். நிலவுலகில் வாழும் நமக்கும் இது பொருந்தும். இங்கே ஐயா தான்ஸ்ரீ இருக்கிறார்கள். தான்ஸ்ரீ ஐயாவைப் பார்த்து இந்தியாவில் சென்னைக்கு வரும் போது என்னுடைய வீட்டிற்கு அவசியம் வரவேண்டும் என்று ரொம்ப அன்பா அழைத்தால் வருவார். அப்படி இல்லாமல் போகும் போது ஒயிலா ஒரு சல்யூட் வைத்துவிட்டுப் போனால் அவர் வருவாரா? உள்ளார்ந்த அன்போடு அழைத்தால் தானே யாரும் வருவார்கள்?

இதேபோலத்தான் பிதிர்ப்பதத்தில் தங்கி இருக்கும் நமது பெரியோர்களையும் மிக்க அன்போடு கூப்பிட்டால் ஓடி வருவார்கள்.

இப்படிப் பெரியோர்களை அழைத்துப் போற்றுகிறார்களே இந்தப் பூவுலகில்—இவர்களே புண்ணியர்கள் என்கிறார் திருமூலர். புவலோகம் போற்றுநர் புண்ணியத்தாரே என்று பாடினார். இந்தப் புண்ணியர்கள் இல்லை என்றால் இந்த உலகம் வாழாது.

இனி, முதலில் கூறிய திருமந்திரப் பாடலால் குறிப்பிட்ட பெரியோரின் இடத்தை கண்டுபிடித்து விட்டோம். இரண்டாவது பாடல் மூலம் அவரை வரவழைத்து விட்டோம்.

ஒரு தமிழாகமத்தில் கிரியைகள் எல்லாம் எவ்வளவு காரணகாரியத் தொடர்புடன் காணப்படுகின்றன பாருங்கள்! இதை நாம் புரிந்துகொள்ளத்தவறி விட்டோம். பெரியோர்களே! திருமந்திரம் ஒரு பொக்கிஷம்—களஞ்சியம்! அதில் கிரியை முறைகள் எவ்வளவு அழகாகச் சொல்லப்பட்டிருக்கின்றன!

நமக்குப் பயன்படும் என்று தானே சிந்தித்து சிந்தித்து ஆண்டுக்கு ஒன்றாக ஒரு பாடல் பாடினார். அதைத் தவறவிட்டால்—அதைப் பயன்

அதைப் பயன்படுத்தாமல் விட்டால் அவர் மனம் என்ன பாடுபடும்! பெரியோர்களே! இந்த வேட்டி—நான் இப்போது கட்டி இருக்கிற வேட்டி—நான் வாங்கியது இல்லை. (அன்பர் திரு. தர்மலிங்கம் ஏற்பாட்டில் நடந்த திருமண ஆண்டு நினைவு விழா ஒன்றில் திருமுறை பாடிச் சொற்பொழிவு ஆற்றிய நிகழ்ச்சியில் அளித்தது). அவரும் இந்தக் கூட்டத்திற்கு வந்திருக்கிறார். இதை நான் கட்டிக்கிட்டா, நாம குடுத்ததை ஐயா கட்டிட்டிருக்காரு என்று அவர் மனம் மகிழ்வார்.

அதைப் போல சிந்தை செய்து பாடியருளிய பாடல்களை நாம் பயன்படுத்தவில்லை என்றால் திருமூலருக்கு எவ்வளவு வருத்தமாக இருக்கும்? திருமூலர் மனம் மகிழ வேண்டுமானால், அதன் உண்மையான பயன் பெற வேண்டுமானால் நீங்கள் இதைக் கைக் கொள்ள வேண்டும்.

முன்னால் கூறிய இரண்டு பாடல்களையும் ஓதி பெரியோர்களை அவரவர்க்க உரிய திதியில் வரவழைத்து அவர்களுக்குத் தூப, தீப அமுதுகாட்டலைச் செய்ய வேண்டும் செய்யும்போது அவரைச் சிவனாகவே பாவித்துச் செய்ய வேண்டும். வண்ணாரப்பேட்டை அன்பர் உதாரணம் சொன்னேனே அதில் அந்த அன்பரின் மகன் சொன்னது போல என் அப்பா சிவலோகம் செல்லமாட்டார் என்றெல்லாம் சொல்லாமல் சிவனாகவே பாவித்து தூப, தீப, அமுதுகாட்டலைச் செய்ய வேண்டும். இப்படிச் செய்துவரின் இந்த வழிபாட்டினால் அவருக்கும் அவரால் நமக்கும் அளப்பரிய நன்மை கிடைக்கும். இது ஒரு பரஸ்பர உதவி என்று கொள்ள வேண்டும். புத் என்கிற நரகத்தை இல்லாமற் செய்பவன் தானே புத்திரன்.

திதி வழிபாட்டில் பூசை முடியும் போது ஒரு பாடல் சொல்ல வேண்டும். அது 545ம் எண்ணுள்ள பாடல். பாடல் வருமாறு :

அறிவார் அமரர் தலைவனை நாடிச்

செறிவார் பெறுவர் சிலர்தத் துவத்தை

நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்

பெரியாருடன் கூடல் பேரின்ப மாமே

நம்முடைய மூதாதையர்கள் நம்முடன் கூடி இருக்கிறார்கள் என்று எண்ணி உவந்து பாடி தீபாராதனை செய்ய வேண்டும்.

தீபாராதனை செய்ய வேண்டும்.

பெரியோர்களே! சில நேரங்களில் நாம் யாருக்கு வழிபாடு செய்கிறோமோ அவர்கள் வேறு ஒரு பிறவி எடுத்திருக்கலாம். அப்படி பிறவி எடுத்திருந்தால் இந்த வழிபாட்டால் என்ன பயன்? என்ற கேள்வி எழும். அதையும் இந்தப் பாடலிலேயே சொல்கிறார். எல்லாவற்றையும் யோசித்த பின்னால தானே மேடை ஏறணும். பாடலில் திருமூலர் என்ன சொல்கிறார்? செறிவார் பெறுவார் சிலர் தத்துவத்தை திருமூலரே சொல்லுகிறார் சிலபேர் 36 தத்துவத்தை அதாவது வேறு ஒரு உடலைப் பெற்று விடுவது உண்டு. அசர் எப்ப போனார், எப்ப வேற உடலில் வந்தார் என நமக்குத் தெரியாது. எனவே பிறவி எடுத்த பிறகு செய்தாலும் அதை விடாதே! நெறிதான் மிக மிக நின்றருள் செய்யும். அந்தப் பூசையை இறைவன் அந்தப் பெரியவர்வழி ஏற்று நமக்கு அருள் செய்வான் என்றார். எநறி—வழி. யாதொரு தெய்வங் கொண்டீர் அத் தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார் தாம் வருவர் என்பது சிவஞான சித்தியார் வாக்கு.

அதாவது நீ உன் அப்பாவை நினைத்து வணங்கும் போது அவர் இல்லாவிட்டாலும் உன் அப்பாவாக ஆண்டவன் அருள் செய்வார் என்றார். இதை இப்படி வைத்துப் பார்ப்போம். அவர் வேறு ஓர் பிறவி எடுக்காமல் இருந்து நீங்கள் அவருக்கு உரிய திதியில் வழிபாடு செய்யாவிட்டால் அவர் மனம் எப்படி வருத்தப்படும் தெரியுமா?

இப்ப நான் சொல்லப் 'போகிற பெரியவரை தான் ஸ்ரீ ஐயாவிற்கு அவரைப் போன்ற மூத்த சிவனடியார்களுக்கும் தெரியும். அதாவது நான் சொல்வது வாரியார் சுவாமிக்கு முன்னால் மிகவும் பரந்த புகழ்பெற்ற ஞானி ஒருவர் இருந்தார் என்றால் அவர் ஞானியார் சுவாமிகள். என்னுடைய தாத்தா ஞானியார் சுவாமிகளின் முதன்மைச் சீடர். ஞானியார் சுவாமிகளோடு ஆவியுலகில் தொடர்பு கொள்ள வேண்டும் என்று நான் மிகவும் ஆவலாய் இருந்தேன்.

ஆவியுலகில் அடியேன் ஒரு நாள் பேசிக் கொண்டிருந்த போது மறைந்த—ஒடுக்கமுற்ற மதுரை சோமசுந்தர பராமாச்சாரிய சுவாமிகள் – தொடர்பு படுத்துகிற பெரியவராய் இருந்தார். நான் சொல்வது இப்போது உள்ள மதுரை ஆதீனமல்ல. கையில் துப்பாக்கி இல்லாமல் விபூதிப்பை மட்டுமே வைத்துக் கொண்டிருந்த பழைய மதுரை ஆதீனம்.

பெரியோர்களே! இங்கே அடியேனது புத்தகசெட் இரண்டு வைத்தருக்கிறேன். இந்த செட்டில் சைவ அனுட்டான விளக்கம் என்ற நூல் இருக்கிறதே—அதை நானாக எழுதவில்லை. ஆவி உலகத்தில் உள்ள பழைய மதுரை ஆதீனம் திருப்பெருந்திரு சோமசுந்தர பரமாச்சாரியார் சைவ அநுட்டனானத்தைக் கொண்டு எழுதச் செய் என்ற ஓர் அன்பர்க்கு (புதுவண்ணை திரு.மு. சண்முகசுந்தரம்) ஆணையிட அதன்படி அவர் என்னை அணுக அடியேன் எழுதியது தான் அந்தப் புத்தகம். அதை வெளியிடும் போது என்க்குப் பழக்கமுள்ள இரண்டு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைக் கொண்டு வெளியிட எண்ணி இருந்தேன். சுவாமிகள் ஆவியுலகிலிருந்து வள்ளிமலையில் வெளியிடுக என்று சொல்லி விட்டார். அதன்படி அந்த நூலை அங்கே வெளியிட்டோம்.

(கூட்டத்திலிருந்து ஒருவர் சைவ அநுட்டமான விளக்கம் என்ற நூல் மதுரை ஆதினம் எழுதியதா என்று கேட்கிறார்)

இல்லை, இல்லை! இந்த நூல் அடியேன் எழுதியது. ஆவியுலகில் இருந்து பழைய மதுரை ஆதினம் ஆணையிட எழுதியது. மதுரை ஆதினம் அவர்கள் நிலவுலகில் இருந்த காலத்தில் ஆவி உலகைப் பற்றி 10 அல்லது 15 நூல்கள் எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். ஆவி உலகைப் பற்றி பல போலி நூல்களும் உண்டு. இவற்றில் எது உண்மை என்று படித்துத் தேற வேண்டும். என்னிடம் ஆவிகளைப் பற்றிய நூல்கள் – 126 புத்தகங்கள் – பல மொழிகளில் எழுதியவை உள்ளன. அத்தனையும் ஆராய்ந்து பார்த்துவிட்டுத் தான் அதன் உள்ளே நுழைந்தேன்.

சரி! மதுரை ஆதினம் அவர்களிடம் ஒருநாள் உய்ஜா போர்டு மூலமாக பேசிக் கொண்டிருந்த போது ஞானியர் சுவாமிகளுடன் பேச வேண்டும் என்று என்னுடைய ஆசையைத் தெரிவித்தேன். நான் காலை 9 மணியில் இருந்து உய்ஜா போர்டு மூலம் ஆவி உலகத்துப் பெரியவர்களிடம் (காந்தி, காமராஜ், சத்தியமூர்த்தி போன்ற பெரியவர்கள்) பேசிக் கொண்டிருந்து விட்டு திரும்பும் போது இரவு மணி 8. தொடர்புபடுத்தி வைக்குமாறு மதுரை ஆதினம் அவர்களிடம் இடையிடையே கேட்டுக் கொண்டே இருந்தேன்.

பிற்பகல் 1 மணி ஆனபோது நான் அனுட்டானம் செய்யப்போகிறேன் என்று குருநாதர் போய்விட்டார். அடடா ஆவி உலகிலும் ஆனுட்டானம் செய்கிறார். காவி உலகிலேயே ஒழுங்காக அனுட்டானம் செய்பவர்களைப் பார்கக் இயலாத காலம் இது. இந்தக் காலத்தில் ஆவி உலகில் அனுட்டானம்! ஆச்சரியப்பட்டேன். மீண்டும் பிற்பகல் சுமார் 3.00 மணியளவில் குருநாதா வந்தார். நான் மீண்டும் ஞானியார் சுவாமியிடம் பேச வேண்டும் என்றேன். என் தொந்தரவு தாங்காமல் நச்சரிக்காதே ! இப்போது ஞானியார் சாமி இங்கே இல்லை. பூமியில் பிறந்துவிட்டார் என்றார். இவ்வளவு நேரம் குருநாதர் தவிர்த்தது ஏன் என்று இப்போது தான் புரிந்தது.

எனக்கு உடல் நடுங்க ஆரம்பித்து விட்டது. உலகத்து மக்களுக்கெல்லாம் வழி காட்டிய மகான் மறுபிறவி எடுத்து விட்டார் என்றால் நாம் எல்லாம் எம்மாத்திரம்! இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்கு மோ, ஏது வருமோ அறியேன் என்று தாயுமானவர் பாடலின் ஆழம் எனக்கு அப்போது தான் அனுபவமாயிற்று.

உடனே வேறு ஓர் எண்ணம் தோன்றியது. ஞானியர் சுவாமிகள் பிறந்துவிட்டார் என்றால் அங்கே போய் பார்க்கலாமில்லையா? குழந்தையாய் அவர் பிறந்திருந்தால் எந்த இடம் என்று கேட்டேன். குருநாதர் அது பற்றிப் பேசமால் பிற சங்கதிகளைப் பேசினார். நான் மீண்டும் மீண்டும் வற்புறுத்தினேன். குருநாதர் அதைச் சொல்வதற்கு ஆணையில்லை என்றார்.

அப்படியானால் எதையெதைச் சொல்ல வேண்டும் என்பதை அவர்கள் ஆணை பெற்றுத் தான் சொல்கிறார்கள் என்பது தெளிவாகிறது. எதைச் சொல்லக் கூடாது, எதைச் சொல்லலாம் என்று ஆணையிட அங்கே ஆட்கள்– அதிகாரம் படைத்தவர்கள்–இருக்கிறார்கள் என்பது இதிலிருந்து தெரிகிறது.

எனவே இது மாதிரி சிலர் மறுபிறவியும் எடுத்துவிடலாம். அப்படியிருந்தாலும் நீ நெறியாக நின்று வழிபட்டால் அவர்கள் நெறியில் ஆண்டவன் அருள்புரிவான் என்று திருமூலர் கூறுவது எவ்வளவு பெரிய அறிந்து கொள்ள வேண்டிய உண்மை !

இப்படி வழிபட்டுப் பெரியாருடன் கூடல் பேரின்பமாமே என்ற திருமூலர் பாடினார். இங்கே பெரியாருடன் கூடல் என்பது இறந்த நம்முடைய அம்மா, அப்பா மற்றும் மூதாதையர்களைக் குறித்தது. பெரியாருடன் என்று சொன்னால் ஈரோட்டுப் பெரியாரை நினைத்துவிட வேண்டாம். எனவே இந்த 3 பாடல்களை ஓதி திதி வழிபாடு செய்யலாம்.

இதுபற்றி என் சொந்த அனுபவத்தைக் கூறுகிறேன். அவர் சொன்னார் இவர் சொன்னார் என்று கூறுவதை விட சொந்த அனுபவம் வலிய சான்றல்லவா? நான் பணி செய்த மின்வாரியத்தில் கடன் பெற்று வீடு வாங்கினேன். அந்த வீட்டில் சில மாற்றங்கள் செய்து கிரகப்பிரவேசம் செய்தேன். எங்கள் மரபு

என்னவென்றால் பொங்கலுக்கு அடுத்துவரும் இரண்டாம் நாள் மாட்டுப் பொங்கல்–அன்று மூதாதையர்க்கு வழிபாட செய்வார்கள். அது காலக் கோலத்தில் பொங்கலன்றே செய்வதும் உண்டு. இது எங்கள் குலவழக்கம். சிலர் மாளய அமாவாசை, ஆடி அமாவாசை என்று சிறப்பாக வழிபாடுவார்கள். என்னுடைய குலமரபுப்படி நான் செய்ய வேண்டிய திதி வழிபாடு பொங்கலன்றும் மாட்டுப் பொங்கலன்றும் இரண்டு பட்டு வந்தது. எனவே கிரகப் பிரவேசம் செய்த முதல் பொங்கலன்று இந்த வழிபாட்டைச் செய்யலாம் என்று முடிவு செய்தேன்.

பொங்கலன்று மாடியில் சூரிய வழிபாடு நடக்கும். காலையில் சைவசந்தி, நித்திய பூசை இவற்றை முடித்துக் கொண்டு மாடிக்கு சூரிய வழிபாடு செய்ய வந்தேன். திருமந்திரத்தில் வரும் அண்டாதித்தன முதல் சிவாதித்தன் வரை பாடல்களைப் படித்து சூரிய பூசைக் கிரியைகளைச் செய்து முடித்தேன். மாடியில் கால் வைக்க முடியாதபடி கொளுத்தும் வெய்யில். இந்த வெய்யிலில் சூரிய வழிபாடு முடித்துவிட்டு கீழே வந்து திதி வழிபாடு செய்ய நடுவீட்டில் பெரியவர்களை வரழைத்து – யதாஸதானம் என்பார்கள் – அந்த நிரந்தர உறைவிடத்தில் முன்னால் கூறிய திருமந்திரப் பாடல்களைக் கொண்டு கிரியைகளைச் செய்து தூப, தீப, அமுதூட்டல் செய்து பூசையை நிறைவேற்றினேன். இந்த வழிபாட்டிற்காக எனது தமையனாரையும் வரவழைத்திருந்தேன். அடியேன் திருமந்திரத்தால் கிரியைகளைச் செய்து முடித்து தீபாராதனை காட்டி முடிக்கவும் கொளுத்திய வெய்யில் போய் எங்கிருந்தோ மேகங்கள் திரண்டு சுமார் அரைமணி நேரம் கொட்டும் மழையாகப் பெய்தது.

என் தமையனார் அன்று உடனே திருச்சிக்குத் திரும்பிச் செல்ல வேண்டும். அவரை ஸ்கூட்டரில் ஏற்றி வழியனுப்புவதற்காக உடன் சென்றேன். நான் இருப்பது பதினோராவது தெரு. தெருவில் இருந்து புறப்பட்டுச் சென்று பார்த்தால் பதினோராவது தெருவிலும் அதற்கடுத்த 12வது தெருவிலும் மட்டுமே அரைமணி நேரமாக கனமழை பொழிந்துள்ளது. அந்த இர்டு தெரவயைும் தாண்டினால் ஒரு துளி கூட மழை பெய்திருக்கக் காணோம். அப்படியானால் திருமந்திரத்தினால் செய்யப்பட்ட கிரியைகளுக்கு வரவழைக்கப்பட்ட தென்புலத்தார் மனம் அவ்வளவு குளிர அதன் அடையாளமாக அந்த இரண்டு தெருவில் மட்டும் மழை கொட்டி இருக்கிறது. இது ஓர் அதிசயமல்லவா? திருமந்திரத்தினால் செய்யப்படும் கிரியைகள் எவ்வளவு பலனிள்கிகறது என்பதை நீங்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இதைச் சொன்னேன்.

இதற்கே இந்தப் பலன் என்றால் திருக்குடமுழுக்குகளைத் திருமந்திரத்தால் செய்தால் நாடும நகரமும் எவ்வளவு செழிக்கும் என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள். ஆனால் திருமந்திரத்தால் கும்பாபிடேகம் செய்வது எப்படி என்று நான் இப்போது சொல்லப்போவதில்லை. அதற்கென்று ஒரு தனி நூலே எழுதியுள்ளேன். அது வெளிவரும் போது தனி வகுப்பு எடுத்து பயிற்சி அளிக்கும் போது அவற்றை விவரிப்பேன்.

முதலில் திருமுறை வழிபாடு பார்த்தோம். அப்புறம் திதி வழிபாடு பார்த்தோம். இப்போது சூரிய வழிபாட்டினைப் பார்ப்போம். இது சிவபூசையில் முதலில் செய்யப்படுவது. திருமந்திரத்தில் சூரியன் ஐந்து வகையாக வைத்து வழிபடப் படகிறது. வடமொழி ஆகமத்திலே கூட இவ்வளவு விரிவாக, இவ்வளவு சிறப்பாக சூரிய பூசை சொல்லப்படவில்லை.

திருமந்திரத்தில் 1975 ஆம் பாடலைப் பாருங்கள். அதற்கு மேல் தலைப்பைப் பார்த்தீர்களேயானால் அண்டாதித்தன் என்று குறிப்பிடப்பட்டிருக்கும். அதில் சில பாடல்கள் இருக்கும். அதன் பின்னால் இரண்டாவதாக பிண்டாதித்தன் என்ற தலைப்பில் சில பாடல்கள் இருக்கும். மூன்றாவத மனவாதித்தன் நான்காவது ஞானாதித்தன் ஐந்தாவது சிவாதித்தன். இது முடிவது 2004ம் பாடலில். மொத்தம் 30 பாடல்கள். இத்தனை பாடல்களும் சூரிய பூசைக்குப் பயன்படுவன.

சூரிய பூசையை எப்படிச் செய்ய வேண்டும்? சூரியனுக்கு உள்நின்று இயக்கும் சிவபெருமானை எண்ணி வழிபாடு செய்ய வேண்டும்.

அப்பர் சுவாமிகள் அருக்கனாவான் அரனுரவல்லனோ என்று பாடினார். அருக்கன் என்றால் சூரியன் என்பது பொருள். அவர் சொன்னது இது தான். சூரியனை வணங்கு. சூரியனுக்குள் இருக்கும், சூரியனை இயக்கும் சிவபெரமானை வணங்கு என்றார். சூரியன் சிவபெருமானாகிய அரனுடைய உருவம். உள்ளே உயிராக இருப்பது சிவபெருமான். அந்த வழியிலே அண்டாதித்தனிலிருந்து ஆரம்பித்து சிவாதித்தனாக வணங்கச் சொல்லியது திருமந்திரம். இப்படி ஒரு வழிபாட்டு முறை வடமொழி ஆகமத்தில் கூட தெளிவாகக் கூறப்படவில்லை. ஆனால் தமிழாகமமாகிய திருமந்திரமோ தெளிவாகக் கூறுகிறது. இந்தப் பகுதியில் வரும் பாடல்களை விரித்துக் கூறுவதற்கு நேரமில்லை. அன்பர்கள் சூரியபூசைக்கு இந்தப் பாடல்களைப் பயன்படுத்துக என்ற அளவில் அடுத்து வேறு ஒரு முக்கியமான வழிபாட்டுக் கிரியை முறைக்கு உரிய திருமந்திரப் பாடலைப் பார்ப்போம்.

அந்தப் பாடல்,

ஒன்றியவாறும் உடலின் உடன் கிடந்து

என்றும்எம் மீசன் நடக்கும் இயல்பது

தென்தலைக் கேற திருந்து சிவனடி

நின்று தொழுதேன் என்நெஞ்சத்தினுள்ளே

இந்தப் பாடல் சதாசிவலிங்கம் என்ற பகுதியில் வருவது. இது சகளீகரணம் செய்வதற்குரிய மந்திரப்பாடல். சகளீகரணம் இல்லாமல் எந்தக் கடவுளையும் வணங்குவது இயலாது. வழிபாட்டக் கிரியை முறையில் இது மிக மிக முக்கியமானது.

பெரியோர்களே! மிகப் பெரிய நிலையில் இருக்கும் கடவுட் பெருமானை—மிக மிக சூட்சுமமாக இருப்பவரை எளிதில் கல்லில் ஏற்றிவட முடியாது. என் கையில் பனிக்கட்டி இருக்கிறது என்று வையுங்கள்.அதை யார் மீதாவது நான் வீசி எறிந்தால் எறியுண்டவர்க்கு அது வலிக்கும். காரணம் பனிக்கட்டி திடப்பொருள். அதுவே தண்ணீரை வீசினால் வலி ஒன்றும் பெரிதாய் இருக்காது, ஆனால் பனிக்கட்டியும் தண்ணீரும் ஒன்று தான். அது திடமாக இருக்கும் போது வலிக்கிறது. நீராக இருக்கும் போது நெகிழ்கிறது. திடமாப இருந்த நிலையில் இரந்து சூக்குமமாகிவிட்ட நிலை நீர். திடமானதைத் தூலாம் என்று சொல்வோம். தூலமாய் இருந்த பனிக்கட்டி சூக்குமமாய் நீராகி விட்டது. தமிழில் சூக்குததட எனடபராத நோன்மை என்று சொல்வோம். தூலம் என்பதை பருப்பொருள் என்போம். பருப்பொருளாக இருந்த பனிக்கட்டி உருகி நீரானதும் நோன்மையாகிவிட்டது. பனிக்கட்டிக்கு வடிவம் உண்டு. நீருக்கு எது வடிவம்? எந்தப் பாத்திரத்தில் அல்லது எந்த பாட்டிலில் அடைகிறோமோ அந்த வடிவத்தை நீர் எடுத்துக் கொள்கிறது. ஆனால் தீக்கு எந்த வடிவமும் கிடையாது. நீரைத் தொடலாம். ஆனால் தீயைத் தொட முடியுமா? எனவே நீரைவிட தீ நோன்மையானது தீயை விடக்காற்று நோன்மையானது காற்றை விட ஆகாயம் நோன்மையானது. அவ்வளவு நோன்மையாக இருந்ததால் தான் அப்படி ஆகாயம் என்ற ஒரு பொருளே அல்லை என்ற பௌத்தர்கள் கூறினார்கள். ஆனால் இன்று ஆகாயத்தின் இருப்பை விஞ்ஞானம் நிரூபித்து விட்டது. சைவ சித்தாந்திகளோ ஆகாயம் உண்டு என்று விஞ்ஞானம் நிரூபிப்பதற்கு முன்னாலேயே கூறினர். ஆகவே நாம் அதை உணர்ந்தவாக்ள. ஆகாயத்தலம் தானே சிதம்பரம்?

இந்த ஐந்து பூதங்களை விட நோன்மையானவை இந்தப் பூதங்களின் காரணமான தன் மாத்திரைகள் தன் மாத்திரைகளை விட நோன்மையானவை கன்மேந்திரியங்கள் கன்மேந்திரியங்களை விட நோன்மையானவை ஞானங்கள். ஞானேந்திரியங்களை விட நோன்மையானவை மனம் என்று சொல்லப்படும் நான்கு அந்தக் கரணங்கள். மனத்தை ஒப்புக் கொள்ளும் மருத்துவர்கள் கூட இது தான் மனம்

என்று உடலை அறுத்துக் காட்டியதாக வரலாறில்லை. மனம் அவ்வளவு நோன்மையானது. மனதத்துவத்தை விட விந்தியா தத்துவங்கள் நோன்மையானவை. வித்தியா தத்துவங்களை விட சிவதத்துவம் நோன்மையானவை. சிவதத்துத்தில் மேலான நாத தத்துவத்தை விட நோன்மையானது ஆன்மா. ஆன்மாவை விட மிக நோன்மையானது பரமான்மாவான கடவுள்.

இத்தனை நோன்மையான பரமான்மாவை அதாவது கடவுளை மிக மிகத் தூலமான மண் தத்துவம் என்று கூறப்படும் கல்லில் நேரடியாக கொண்டுவர முடியாது. முதலில் பரமான்மாவை நம் ஆன்மாவிற்குக் கொண்டு வர வேண்டும். நம் ஆன்மாவிலிருந்து உடம்பிற்குக் கொண்டு வரவேண்டும். உடம்பிலிருந்து எதிலே நினைக்கிறோமோ அதிலே கொண்டு வர வேண்டும். எதிரில் உள்ள பொருளுக்குக் கொண்டு வருமுன் உடம்பிற்குக் கொண்டு வருகிறாமே அது தான் சகளீகரணம் எனப்படும். தமிழில் மெய்யொன்றால் என்று கூறுவர்.

உதாரணத்திற்கு நம் வீட்டில் கௌரி நோன்பு என்றால் கவசம் வைத்து வழிபடுவோம். நேரடியாகக் கலசத்திற்கு அம்பிகையைக் கொண்டு வரமுடியாது. நம் உடம்பில் ஆவிர்ப்பாவம்—சகளீகரணம் செய்து அதில் இருந்து கலசத்திற்கு கொண்டு போய் சேர்க்க வேண்டும். இது தான் முறைமை. இது தான் சகளீகரணம் என்ற கிரியையின் உட்கிடை.

சுந்தரமூர்த்தி நாயனார் ஒரு பாடலில் இதைக்குறிப்பிடுகிறார்.

சந்தி மூன்றிலும் தாபரம் நிறுத்திச்

சகளி செய் திறைஞ் சகத்தியர் தமக்கு

சிந்து மாமணி அணிதிருப் பொதியில்

சேர்வு நல்கிய செல்வம்கண் டடைந்தேன்

அகத்தியரே சகளீகரணம் செய்து வழிபட்டடார் என்று சுந்தரர் கூறுகிறார்.

எனவே எந்த வழிபாடு செய்தாலும் சகளீகரணம் செய்து தான் வழிபாடு செய்ய வேண்டும் என்பது தெளிவு.

இங்கே நாம் பார்த்த ஒன்றிய வாறும் எனத் தொடங்கும் திருமந்திரப் பாடல் எல்லா வழிபாட்டிலும் பயன் படுத்திக் கொள்ளக்கூடிய பொதுச் சகளீகரணப் பாடல். யாரை வணங்கி னாலும் சிவபெருமான் தான் வந்து மன்னின்றருள் புரிவான்.

சம்பந்தர் ஒரு பாடலில் கூறும் போது எந்த வேள்வி செய்தாலும் அதில் சிவபெருமானை முன்னாக வைத்தே வேள்வி ஆற்ற வேண்டும் என்று கூறினார். இதுவே ஆதி மாமறை விதி என்றார்.

ஆதிமா மறை விதியினால் ஆறுசூழ்வேணி

நாதனாரை முன்னாகவே புரியுநல் வேள்வி

வேள்வியே சிவபெருமானை முன்னாக வைத்துத்தான் ஆற்றுதல் வேண்டும் என்றால் ஏனைய வழிபாடுகளைப் பற்றிக் கூற வேண்டாம். எனவே இதுவே ஆதி மாமறை விதி என்றதனால் முன்னால் கூறிய ஒன்றியவாறும் என்னும் சிவ சகளீகரணப் பாடலை எல்லா வழிபாட்டிலும் பொதுச் சகளீரணம் பாடலாகப் பாடியே தொடங்க வேண்டும்.

அப்புறம் அந்தந்த தேவதைகளுக்குரிய சகளீகரணப் பாடல்கள் இருப்பின் அவற்றைச் சிறப்பு சகளீகரணப் பாடல்களால் ஓதக் கொள்ளளலாம். இது ஒரு முறைமை ஆதி மாமறை விதி முறைமை.

பொதுச் சகளீகரணப் பாடலைப் பாடிப் பிறகு அம்பிகைக்கு அதாவது கௌரிக்கு உரிய சிறப்புச் சகளீகரணப் பாடலைப் பாடினால் கௌரி—அம்பிகை கலசத்தில் எழுந்தருளி விடுவாள்.

இங்கே கூறிய பூசையைப் பற்றியும் அதற்குப் பயன்படும் பாடல்களையும் பார்த்தோம். இங்கேயும் அதே முறைமையில் சூரிய சகளீகரணப் பாடலை ஓதுக. பாடல் வருமாறு

உணர்ந்தேன் உலகில் ஒண்பொருளானை

கொணர்ந்தேன் குவலயம் கோயில்என் நெஞ்சம்

புணர்ந்தேன் புனிதனும் பொய்யல்ல மெய்யே

பணிந்தேன் பகலவன் பாட்டும் ஒலியே

இந்தப் பாடல் 1748ஆம் பாடல். இதைப்பாடி தலை உச்சியில் வைத்த மலரை எதிரிரல் உள்ள கலசத்தில் அல்லது சந்தனக்கூம்பில் அல்லது படத்தில் சொரிக. உடனே சூரியன் அங்கே எழுந்தருளி விடுவான். உடன் தீப, தூப, அமுதூட்டலைச் செய்து முன்னர்க் கூறிய அண்டாதித்தன் முதல் சிவாதித்தன் வரை உள்ள 30 திருமந்திரப் பாடல்களை ஒவ்வொரு பாடலுக்கும் மணியொலித்து மலரிட்டு அருச்சனை செய்து மகாதீபாராதனை செய்து வழிபாட்டை நிறைவு செய்யலாம்.

பெரியோர்களே! முன்னே சொன்ன சூரிய சகளீகரணப் பாடல் (1748) சதாசிவலிங்கம் என்கிற பகுதியில் காணப்படுவது. சதாசிவம் என்பது கோவில் கோபுர கலசத்தைக் குறிக்கும். இதையே தூலலிங்கம் என்றும் கூறுவர். கருவறைக்கு உள்ளே இருப்பது சூக்குமலிங்கம். ஆகவே சதாசிவப்பகுதியில் சூரியனுக்கு உரிய சகளீகரணத்தை செய்யும் பாடலை திருமூலர் ஏன் பாடினார் என்றால் அதைப்பாடி சூரிய சகளீகரணம் ஆகுமானால் சூரியனிடமிருந்து அருளாற்றலை கோபுரக் கலசம் வாங்கிக் கீழே அனுப்பும். இப்படியே சந்திரனிட மிருந்து ஆற்றலை வாங்கிக் கீழே அனுப்ப இதே பகுதியில் சந்திர சகளிகரணப்பாடலும் உண்டு.

அடுத்து இன்னொரு உதாரணம் பார்ப்போம். சரஸ்வதி பூசை செய்ய வேண்டுமானால் சரஸ்வதிக்குக் கலசம் அல்லது படத்தை முன் வைத்து மாலை அலங்காரங்கள் எல்லாம் செய்து ஆயத்தம் செய்ய வேண்டும். கலசத்தில் (அ) படத்தில் சரஸ்வதியை எழுந்தருளச் செய்ய முன் சொன்னது போல ஒன்றியவாறும் எனத்தொடங்கும் பாடல் ஓதுக. பின்னர் கீழ்வரும் கலைமகளுக்கு உரிய சிறப்புச் சகளீகரணப் பாடலை ஓதி சகளீகரணம் செய்து கலசத்தில் (அ) படத்தில் கலைமகளை எழுந்தருளச் செய்து தூப, தீப, அமுதூட்டல் செய்து கலைமகள் துதிப்பாடல்கள் பாடி மகாதீபாராதனை செய்து வழிபாட்டை நிறைவு செய்யணும்.

கலைமகளுக்கு உரிய சிறப்பிச் சகளீகரணப் பாடல் வருமாறு :

தலைவி தடமுலை மேல்நின்ற தையல்

தொலைவில் தவம் செய்யும் தூய்நெறித் தோகை

கலைபல வென்றிடும் கன்னிஎன் உள்ளம்

நிலைபெற இங்கே நிறைந்துநின் றாளே! — (பாடல் 1060)

இதே மாதிரி லட்சுமிக்கு உரியசகளீகரணப் பாடலும் உண்டு. அது,

கொம்பனை யாளைக் குவிமுறை மங்கையை
வம்பவிழ் கோதையை வானவர் நாடியைச்
செம்பவளத் திருமேனிச் சிறுமியை
நம்பிஎன் உள்ளே நயந்து வைத்தேனே – (பாடல் 1058)

ஆரே திருவின் திருவடி காண்பர்கள்
நேரே நின்றோதி நினையவும் வல்லார்க்கும்
காரேர் குழலி கமல மலரன்ன
சீரேயும் சேவடி சிந்தை வைத்தாளே – (பாடல் 1200)

திருமந்திரத்தில் இல்லாதது எதுவுமில்லை அதில் சொல்லாதது எதுவுமில்லை. எது எது எதையெதைக் குறித்தது என்று புரியாததால் நாம் இதைப் பயன் படுத்தாமலே போய்விட்டோம். இப்போது எடுத்துச் சொன்னால் புரிகின்றதல்லவா?

ஒரு பிள்ளைக்கு அப்பா கொஞ்சம்முதல் கொடுத்து வியாபாரம் செய் என்றால் பிள்ளைதான் வியாபாரம் செய்து முதலைப் பெரக்க வேண்டும். அப்பாவே கூட நின்று எல்லா வேளையும் ஊட்டி ஊட்டி உதவ முடியாது.

அது போல பொதச் சகளீகரணம் செய்ய இந்தப்பாடல் அதன் பின் சூரிய சகளீகரணத்திற்கு இந்தப் பாடல் என்று சொன்னால், உடனே பிற எல்லா வழிபாட்டிற்கும் உரிய பாடல்களை நாமே தெரிந்தெடுத்துப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதனால் தானே சதாசிவலிங்கப் பகுதியில் 1747 ஆம் பாடலில் பொதுச் சகளீகரணப் பாடலை வைத்த திருமூலர் உடன் சூரிய சகளீகரணப் பாடலை அதற்கடுத்த பாடலாக 1748 ஆம் பாடலாக வைத்து வழி காட்டினார்?

பள்ளியில் கூட ஆசிரியர் முதலில் ஒரு கணக்கு போட்டுக் காட்டி இது தான் முறை என்று வழிகாட்டுவார். அப்புறம் அதைத் தொடர்ந்து நாம் தான் அந்த முறையைப் பின்பற்றி ஏனைய கணக்குகளைப் போட வேண்டும்.

எனவே திருமந்திரப் பாடல்களை வெறுமனே பாடல் பாடலாகப் பாடி பதம் பதமாகப் பிரித்து சொல்லுக்குச் சொல் உரை கண்டால் போதாது. ஒரு பாடலுக்கு கூறுகிற பொருள்களில் மூன்று வகை உண்டு. அவை 1) செம்பொருள் 2) இலக்கணைப் பொருள் 3) குறிப்புப் பொருள்.

முதலாவதாக, செம்பொருள் என்றால் சொல்லுக்குச் சொல் பொருள் சொல்லுவது. அதாவது பதவுரை– என்ன சொல் உள்ளதோ அதற்கு உரிய பொருளை உரையாகச் சொல்லுவது.

இரண்டாவதாக இலக்கணைப் பொருள் அதாவது ஒன்றைச் சொல்வார்கள். அந்த ஒன்று மற்றொன்றுடன் தொடர்புடையதாக இருக்கும். எனவே தொடர்புடைய எல்லாவற்றையும் சொல்லாமல் ஒன்றைச் சொன்னால் தொடர்புடைய எல்லாப் பொருளையும் எடுத்துக் கொண்டு புரிந்து கொள்ளும் பொருள் இலக்கணைப் பொருள்.

ஒரு சின்னக் குழந்தை முதல் வகுப்பு படிக்கிற குழந்தை. அவனைக் கூப்பிட்டு வச்சிப் பேசிக் கொண்டிருக்கிறேன் என்று வைத்தக் கொள்வோம். அவன்கிட்ட நான் என்ன சைவசித்தாந்தமா பேச முடியும்? என்ன சாப்பிட்டாய் என்று கேட்பேன்.

சாதம்

எப்படா சாப்பிட்டே?

இப்ப

யார் ஊட்டினா?

அம்மா

அந்தக் குழந்தை மழலையில் பதில் சொல்லிக் கொண்டிருக்கும்.

இங்கே அந்தக் குழந்தை சாதம் சாப்பிட்டது என்றால் வெறும் சாதமா சாப்பிட்டிருக்கும்? அவன் அம்மா அவனுக்கு முதலில் பருப்புச் சாதம் அல்லது சாம்பார் சாதம் ஊட்டியிருப்பா. அப்புறம் ரசம் சாதம் கொஞ்சம். அப்புறம் தயிர் சாதம் கொஞ்சம் கொடுத்திருப்பா.

இங்கே அந்தக் குழந்தை சாதம் உன்று ஒன்றைத் தான் சொல்லியது. ஆனால் ஒன்றிலிருந்து மற்றொன்றை நாமாக பருப்புச் சாதம், சாம்பார் சாதம், தயிர் சாதம் என்று ஊகித்தக் கொள்கிறோம். இப்படி ஒன்று மற்றொன்றுடன் தொடர்புடையதாக இருக்கும் போது ஒன்றிலிருந்து மற்றொன்றைப் புரிந்து கொள்வது தான் இலக்கணைப் பொருள்.

அடுத்தது குறிப்புப்பொருள். பாடலில் அந்தச் சொல்லிலே வந்திருக்காது. ஆனால் அந்தக் குறிப்பை உய்த்துணரும்படி சொல்லி இருப்பார்கள். இதைச் சொல்லெச்சம் பொருளெச்சம் என்றெல்லாம் இலக்கணத்தில் கூறுவார்கள்.

தமிழிலக்கியத்தில் அகத்துறையில் வரும் பாடல்கள் எல்லாம் குறிப்புப் பொருளில் தான் பாடப்பட்டிருக்கும். அகநானூற்றிலே உள்ள நானூறு பாடல்களும் குறிப்புப் பொருளிரேயே பாடப் பட்டவை. சொல்லுக்குச் சொல்பொருள் கூறும்படி நேரடியாகச் சொன்னால் அங்கே ஒரே காதல் மயமாகி விரசமாகி விடும். என்னடா காதலைப் பற்றியே நானூறு பாடலா என்று அலுத்துக் கொள்வான். குறிப்புப் பொருள்படப் பாடினால் அந்தக் குறிப்பை உய்த்துணரும் போது ஒரு விடுகதைக்கு விடை கண்டது போல சுவாரசியமாகி விடும். கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் என்று பாடினார் வள்ளுவர். கண்ணும் கண்ணும் பேசுவது என்றால் அங்கே மொழி ஏது? எல்லாம் குறிப்பினாலே உணரப்படும். சொல்லே இல்லாமல் குறிப்பினால் இருவர் மட்டும் உயர்வதனாலே தானே அதை அகத்துறை என்றான் தமிழன். அங்க போய் எல்லாம் வெளிப்படையா சொன்னா விரசமாகி விடும்.

காதல் மட்டும் குறிப்புப் பொருளில் வருவது அல்ல. அதற்கு உள்ளும் அந்தச் சிற்றின்பத்திற்குள்ளும் பேரின்ப பொருளைக் குறிப்பாக வைப்பது உண்டு. அப்படிப் பாடியது தானே திருக்கோவையார்?

இந்த திருக்கோவையாருக்கு ஒரு பழைய உரை இருக்கும். அதற்கு உள்ளும் அந்தச் சிற்றின்பத்திற்குள்ளும் பேரின்பப் பொருளைக் குறிப்பாக வைப்பது உண்டு. அப்படிப் பாடியது தானே திருக்கோவையார்?

இந்த திருக்கோவையாருக்கு ஒரு பழைய உரை இருக்கும். அதற்கு மேலே கொளு என்று ஒரு கண்ணி கொடுத்திருப்பார்கள். இந்தக் கொளுவில், குறிப்பிட்ட திருக்கோவையார் பாடலில் உள்ள பேரின்பப் பொருள் என்ன என்று குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கும். இந்தக் கொளு என்பது தான் பின்னாளில் ஆங்கிலத்தில் குளூ என்று மாற்றி எழுதி வைத்தக் கொண்டான்.

திருவள்ளுவர் காமத்துப்பாலை அதாவது அகத்துறையை 25 அதிகாரமாக வைத்தார். அதை மாணிக்கவாசகர் 400 துறையாக விரித்து திருக்கோவையாரைச் செய்தார். பிறகு கடிகை முத்துப் புலவர் என்று ஒருவர் வந்தார். அவர் திருக்கோவையார் காட்டிய நானூறு பாடல்களைப் பாடி விரித்துரைத்தார். அதற்கு ஒருதுறைக் கோவை என்று பெயர். இந்த ஒவ்வொரு பாடடிற்கும் சேதுபரி ராஜா தங்கத்தினால் ஆன ஒரு தேங்காயைக் கொடுத்தாராம். இப்ப நானும் அப்படிப் பாடுவேன். ஆனால் அந்த ராஜா இப்ப இல்லை.

ஆ! ஒரு துறைக்கே 400 பாடல்கள்! எவ்வளவு நுட்பமான அறிவு! எவ்வளவு பாராட்டலாம் அந்தப் புலவரை!

எனவே அகத்துறைப் பாடல்கள் முழுமையும் குறிப்புப் பொருளையே அடிப்டையாகக் கொண்டு பாடப்பட்டவை. இந்தக் குறிப்புப் பொருளிலும் குறிப்புப் பொருளை வைத்துச் சிவபெருமானைப் போற்றிப் பாடினார்கள் புலவர்கள். எனவே தானட பொய்படிமை இல்லாத புலவர் என்று போற்றப்பட்டனர்.

சொல்லே கூறப்படாமல் குறிப்பு காட்டி பொருளை உய்த்துணரச் செய்வதற்கு ஒரு உதாரணத்தைச் சொல் !கறேன். ஞானசம்பந்தர் வரலாற்றறை சேக்கிழார் பாடுகிறார். ஞானசம்பந்தர் பிறந்தார் வளர்த்தார் தொட்டிலிலே இட்டார்கள். பிள்ளை வளர்ந்து மூன்றாம் ஆண்டில் ஞானப்பால் உண்டு தமிழமுத மறை மொழிகளைப் பொழியும் வரை 3 ஆண்டு வளர்ச்சியையம் பாடுகிறார் சேக்கிழார். தொட்டிலிலே இடுவதைப் பாடும் போது இவர் தான் முருகன் என்று குறிப்புப் பொருளில் கூறுகிறார்.

இக் குழந்தையை மெல்ல மெல்ல வளாக்கிறார். அவரைத் தான் தன் கையால் வளர்க்க வேண்டும் என்று சேக்கிழாருக்கு ஆசை. ஞானசம்பந்தருக்கு ஒரு சின்ன பிள்ளைத் தமிழே பாடிவிடுகிறார்.

முதலில் காப்பு பிறகு தாலாட்டு அப்புறம் சப்பாணி என பிள்ளைத் தமிழுக்குரிய பருவங்களை வைத்து இலக்கண மரபுப்படி பாடுகிறார்.

ஆறுலவு செய்ய சடை ஐயர் அருளாலே

பேறுல கினுக்கென வரும் பெரியவர்க்கு

வேறுபல காப்பு மிகை என்றவை விரும்பார்

நீறுதிரு நெற்றியில் நிறுத்தி நிறைவித்தார்

இப்படிப்பாடி ஞானசம்பந்தர்க்கு திருநீற்றுக் காப்பு செய்கிறார்.

பெரியோர்களே! குழந்தைப் பருவத்திலேயே தழும் பருவம் இருக்கிறதே அது மிகவும் அழகான பருவம்ம்! தவழும் பருவத்தில் குழந்தை முன் யாராவது போக வர சென்றால் அந்தக் குழந்தை அவர்கள் போகும் பக்கமெல்லாம் பக்கமெல்லாம் தலையைத் திருப்பித் திருப்பிப் பார்க்கும். ஞானசம்பந்தர்க்

குழந்தையும் இப்படித் தலையை அசைத்து அசைத்துப் பார்க்கிறதாம். அந்த அசைவுக்கு சேக்கிழார் பொருள் சொன்னார். என்ன தெரியுமா? சிவபெருமானுக்குத் தொண்டுச் செய்வதல்லாமல் பிற சமயத்தொண்டுகளைச் செய்யேன், செய்யேன் என்று ஞானசம்பந்தக் குழந்தை தலையை அசைத்து அசைத்துச் சொன்னதாம்.

பெருமழுவர் தொண்டல்லால் பிறிதிசையோம் என்பார்போல்

திருமுகமண் டலமசயச் செங்கீரை ஆடினார்.

சேக்கிழாருக்கு ஈடு இணையாக வேறு யாரையும் சொல்ல முடியாது என்று நாமும் தலையை அசைக்க வேண்டியது தான். இப்படி அற்புதம் அற்புதமாக எல்லா பருவங்களுக்கும் பருவத்திற்கு ஒன்றாகப் பாடல்களைப் பாடுகிறார் சேக்கிழார்.

தாயர் மடித் தலத்தினிலும் தயங்குமணித் தொட்டிலும் இது தாலாட்டுப் பருவப் பாடல். மொத்தம் பத்துப் பருவம். இதில் ஒரு பருவத்தை மட்டும் பாடாமல் விட்டுவிட்டார். ஏன் தெரியுமா? ஏனென்றால் 3 ஆண்டுகள் முடிந்ததும் இந்தக் குழந்தை எம்பிராட்டியாகிய அம்பிகையின் ஞூானப்பால் உண்ணப் போகிறது. அவ்வாறு ஞானப்பால்உண்ணப் போகும் வாயை எச்சிலாக்கக் கூடாது என்று முத்தப்பருவத்தை வேண்டுமென்றே விட்டார். (கூட்டத்தினர் கை தட்டல்)

தாம் இப்படி ஒரு குறிப்புப் பொருளில் முத்தப் பருவத்தைப் பாடாமல் விட்டதற்கே இன்னோரிடத்தில் குறிப்பு வைத்தார். அதாவது சிறுத்தொண்டர் புராணத்தில் இந்தக் குறிப்பைக் காட்டுகிறார். அங்கே அரிந்து சமைத்து அடியார்க்கு அமுதாகப் போகிற தம் குழந்தை சீராளனைத் குளிப்பாட்டினார்களாம் பவுடர் போட்டார்களாம் (கூட்டத்தினர் முறுவலிக்கிறார்கள்) ஏன்? நறுமணத் தூள் எல்லாம் அப்பவே உண்டு. அதை இந்தக் காலப் பாஷையில் சொன்னேன். அவ்வளவு தான். சரி, சீராளக் குழந்தைக்குப் பவுடர் அடித்து பொட்டு வைத்தார்களாம். உடன் தூக்கி முத்தமிடப் போகும் போது இக்குழந்தை அடியார்க்குரியது அதை எச்சில் செய்யக்கூடாது என்று எண்ணி முத்தமிடாமல் விட்டு விட்டார் என்று சேக்கிழார் பாடினார்.

இந்த எண்ணம் சேக்கிழார் மனதில் ஊற அதன் அடிப்படையிலே ஞானச்சம்பந்தக் குழந்தைக்குத் தாமும் முத்தப்பருவத்தைப் பாடாமல் விட்டார். இதை நாமாக உணரும் படி சிறுத்தொண்டர் புராணத்திலே காட்டினார்.

பெரியபுராணத்தை முழுமையாகப் படித்தால் தான் அதற்கு உடைர எழுத முடியும். இது சி.கே.எஸ., உரையில் கூட இருக்காது. அடியேன் இறயைருளால் உணர்ந்து வெளிப்படுத்திச் சொன்னேன்.

எனவே குறிப்புப் பொருள் மிக மிக முக்கியம். செம்பொருளை யார் வேண்டுமானாலும் சொல்லலாம். இலக்கணைப் பொருள்களை பரந்த அறிவுள்ளவர்கள் சொல்லலாம். ஆனால் குறிப்புப் பொருளை இறையருளால் தான் சொல்ல முடியும். இதைத் திருமந்திரத்திலேயே திருமூலர் சொல்லி இருக்கிறார்.

அருட்கண் இல்லார்க்கு அரும்பொருள்கள் தோன்றா என்பது திருமந்தரவாக்கு. அருட்கண் இருந்தால் தான் அருளாளர் நூல்களுக்கு உரை எழுத முடியும். அருள் இல்லாவிடில் உரை எழுத இயலாது. அப்படி மீறி எழுதினால் அந்த உரை தலையணை உறை ஆகிவிடும்.

இந்தக் குறிப்புப் பொருளில் தான் திருமூலர் வழிபாட்டிற்கு உரியகிரியை முறையை திருமந்திரத்தில் கூறினார். முதலில் ஒன்றியவாறும் என்று தொடங்கும் பாடலை பொதுச் சகளீகரணம் செய்யப்பாடு என்று அந்தப் பாடலைப் பாடி அடுத்து க்ஷரியனைச் சகளீகரணம் செய்வதற்குச் சிறப்ப்ப பாடலைப் பாடினார். இங்கே இதே மாதிரி எல்லா வழிபாட்டிற்கும் செய் எனற் குறிப்புப் பொருளை வைத்தார். இந்தக் குறிப்புப் பொருளை உணர்ந்து ஏனைய கடவுளர் வழிபாட்டிற்குரிய பாடல்களை எடுத்தாளுதல் வேண்டும். எல்லாக்

கிரியைகளுக்கும் உரிய பாடல்கள் திருமந்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அங்கங்கே வைக்கப்பட்டுள்ள குறிப்புப் பொருளை உணர்ந்து அந்தந்த பாடல்கைளக் கண்டுபிடித்து நாம் கையாளுதல் வேண்டும். இது பெரிய வேலை அறிஞர்களின் கடமை. இதில் ஒன்றிரண்டு கோடிகாட்டியுள்ளேன். எஞ்சியவற்றிற்கு அடியேன் எழுதியுள்ள செந்தமிழாகம திருக்குட நன்னீராட்டு நன்னூலைப் பார்க்கலாம். அது அச்சில் உள்ளது. விரைவில் வெளிவரும் என்று கூறிக்கொண்டு திருமந்திரத்தில் கிரியைகள் என்ற என் உரையை நிறைவு செய்கிறேன்.

<u>கேள்வி நேரம்</u> :

அடுத்தபடியாக வழக்கம் போல கேள்வி நேரம். திருமந்திரத்தில் கிரியைகள் என்பது தொடர்பாக அடியேன் பந்தாய் என்ற இடத்தில் வேறு ஒரு தலைப்பில் பேசியபோது திரு. மயில் வாகனனார் என்ற அன்பர் சில கேள்விகளை முன் வைத்தார். நான் அவருக்கு தொடர்புபற்றி இங்கே பதில் சொல்கிறேன் என்று கூறியிருந்தேன். அவரும் இங்கே வந்திருக்கிறார். அவருக்கு விடை சொல்ல வேண்டும். அவரது கேள்விகளைப் படிக்கிறேன்.

முதல் கேள்விக்குப் பதில் இரண்டு கேள்விகளுக்கு நேரம் கருதி தொகுத்து பதில் சொல்கிறேன். யந்திரங்களைப் பற்றி திருமந்திரத்திலே நாலாவது தந்திரம் முழுதும் சொல்லப்பட்டிருக்கிறது. அடியேன் வேள்விகளில்—கோயில் குடமழுக்குகளுக்கென செய்யும் வேள்விகளில் – பயன்படுத்தும் யந்திரங்கள் அனைத்தும் திருமூலர் சக்கரங்களே. வேறு சக்கரங்களை அடியேன் பயன்படுத்துவதில்லை. வடமொழியில் உள்ள சக்கரங்கள் எதற்காகச் செய்யப்பட்டவை என்பது நம்மில் பலருக்குத் தெரியாது. அது உண்மையிலேயே அந்த தேவதைக்கு உரியது தானா என்பதைப் பரிசோதிக்கவும் அறியோம். நமக்கு வடமொழி தெரிந்து அதன்பின் அந்த சக்கரத்தைப்பற்றி தெரிந்து கொண்டு உபயோகிப்பது என்பது அவ்வளவு எளிதல்ல. எனவே திருமந்திரத்தில் கூறப்பட்ட சக்கரங்களையே பயன்படுத்துகிறேன்.

திருமந்திரத்திலே அநேக சக்கரங்கள் உள்ளன. திருவம்பலச் சக்கரம் அதில் முதன்மையானது. பாடல் எண்ணிக்கை 920ஐ எடுத்துக் கொள்ளுங்கள்

இருந்தஇவ் வட்டம் இருமூன்றி ரேகை

இருந்த அதனுள் இரேகை ஐந்தாக

இருந்த அறைகள் இருபத்தைஞ்சாக

இருந்த அறையொன்றில் எய்து மகாரமே

இது ஒரு வகை திருவம்பலச் சக்கரம். இதற்கு அடிப்படையான திருவம்பலச் சக்கரம் பற்றிய பாடல் 904.

திருவம் பலமாகச் சீர்சசக் கரத்தைத்

திருவம் பலமாக ஈராறு கீறித்

திருவம் பலமாக இருபத்தைஞ் சாக்கித்

திருவம்பலமாகச் செபிக்கினறவாறே

இவற்றையெல்லாம் சொற்பொழிவாகச் சொன்னால் மனத்தில் பதியாது. அடியேன் ஒருவருடத்தில் நடத்திய திருமந்திர முகாமில் 3 நாட்களும் நாலாம் தந்திரம் மட்டுமே முழுக்க முழுக்கப் பார்த்தோம்.

அப்போது ஒரு கரும்பலகை வைத்து அதில் சக்கரங்களை எழுதிக் காட்டினேன்—சொன்னால் ஞாபகத்தில் நிற்காது என்பதால் ஒவ்வொரு சக்கரங்களையும் எழுதிக் காட்டினேன்.

திருவம்பலச் சக்கரம் எப்படி அமைக்க வேண்டும் என்று இப்பச் சொன்ன திருமந்திரப் பாடல்களில் திரு+லர் சொல்லி இருக்கிறார். ஆறு கோடுகள் குறுக்காகவும் ஆறுகோடகள் எநடுக்காகவும் போடச் சொல்கிறார். போட்டால் இருபத்தைந்து அறைகள் கிடைக்கும். ஒவ்வொரு கிடைவரிசையிலும் பஞ்சாட்சரத்தை இப்படி அடைக்க வேண்டும். (எழுதிக் காட்டப்படுகிறது)

நமசிவய

மசிவயந

சிவயநம

வயநமசி

யநமசிவ

ஒவ்வொரு வரிசையிலும் மேலிருந்து கீழாக நமசிவய, மசிவயந, சிவயநம. வயநமசி, யநமசிவ என்று அடைத்தால் அது இயல்பாக சுழலும்—இது பொதப் பலனுக்கான திருவம்பலச் சக்கரம். இதிலேயே எந்தெந்தப் பலனை வேண்டுகிறோமோ அந்தந்தப் பலனுக்கேற்ப திருவம்பலச் சக்கரத்தை மாற்றி மாற்றி எழுதிக் காட்டுவதற்கு உரிய பாடல்கள் திருமந்திரத்தில் உண்டு.

வாயுவைத் தூண்ட வேண்டுமா? அதற்கு ஒரு சக்கரம். நீரைப் பெருக்க வேண்டுமா? அதற்கு ஒரு சக்கரம். ஒவ்வொன்றையும் எப்படி எப்படி அமைக்க வேண்டும் என்பவை திருவம்பலச் சக்கரப் பாடல்களில் கூறப்பட்டிரக்கினற்ன. அவையெல்லாம் விவரிக்க இப்ப நேரமில்லை.

ஒரு சிலர் இந்தச் சக்கரத்தை எழுதும் போது நமசிவய என்று எழுதி அறைகளை அடைக்காமல் நமசிவாய என்று எழுதி விடுவார்கள். வகரத்தை நெடிலாகப் போட்டால் அது சக்கரமாகாது. அது மந்திரமல்ல. அது ஒரு சொற்றொடர். பெரியோர்களே! வகரம் எம்பிராட்டிக்குரிய எழுத்து. சிகரம் சிவபெருமானுடைய எழுத்து. இதை விரிவாகச் சொல்லப் புகுந்தோமானால் நேரமாகும். ஐந்தாம் நாள் திருக்கூத்து தரிசனத்தைப் பார்க்கும் போது இதுபற்றி விளக்கம் சொல்கிறேன்.

இப்போதைக்கு மந்திரமாக உச்சரிக்கும் போது நமசிவய என்றுதான் உச்சரிக்க வேண்டும். சக்கரமாக எழுதும் போதும் நமசிவய என்று தான் எழுத வேண்டும். அப்போது தான் உயிர் உள்ளதாக இருக்கும். குருவினிடம் மந்திரமாகப் பெறும் போது நமசிவய என்று தான் சொல்லப் பெறும் சொல்லப் பெற வேண்டும். குருமுகமாக மறை வாகப் பெற்றதை வெளியே எடுத்துச் சொல்லும் போது அந்த மந்திரத்தை அப்படியே சொல்லக் கூடாது என்பது மரபு விதிக்கும் விதி. எனவே அதை மந்திரமாக அப்படியே சொல்லாமல் அதன் சாயலாக நமசிவாய என்பார்கள். இங்கே நமச்சிவாய என்பது ஒரு சொற்எறாடர். மந்திரசாயல் பெற்ற சொற்றொடர். எனவே தான் குருமுகமாக மறைவகப் பெறுவதை வெளியே கூறும் போது திருவாசகம் நமசிவாய வாழ்க என்று எடுத்துக் கூறுகிறது. யானேயோ தவம் செய்தேன், சிவாய நம எனப்பெற்றேன் என்று மணிவாசகத் பாடும் போதும் சிவயநம என்ற ஐந்தெழுத்தின் சாயலாக சிவாயநம எனப் பாடப்பட்டது.

யந்திரங்களைச் செய்யும் போது தகடு சதுரமாகவே இருக்க வேண்டும். இரண்டங்குல சதுரமாக இருப்பது நல்லது. கிடைத்த தகடை வைத்துக் கொண்டு செய்யக் கூடாது. செய்யத் தெரிந்தவர்களிடம் கொடுத்துச் செய்ய வேண்டும். இதில் வெறும் தொழில் நுட்பம் மட்டும் போதாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். உரிய நேரத்தில் உரிய முறையில் சக்கரம் செய்பவர் சிவசிந்தையுடன் செய்தல் வேண்டும்.

இவ்வாறு செய்யப்படும் யந்திரத்தைப் பூசை செய்யும் போது தகட்டின் நடுவில் சந்தன குங்குமத்தை வைத்து எழுத்தை மறைத்து விடுவார்கள். இது தவறு. எந்த எழுத்து செயல்பாட்டுக்கு வரவேண்டுமோ அதை மறைத்துவிட்டால் என்ன பொருள்? எனவே இரண்டு எழுத்திற்கு இடையிலோ அல்லது யந்திரத்தின் மூலைகளிலேயோ சந்தன குங்குமத்தை வைக்க வேண்டும். சொன்னால் உங்களுக்குப் பயனாகும் என்பதால் இதையெல்லாம் சொல்கிறேன்.

திருவம்பல சக்கரம் எங்கே இருந்தாலும், அது எங்கே முறையாக பூசிக்கப்பட்டாலும் அங்கே பேரின்பம் குடி கொண்டிருக்கும் என்பது உறுதி வீடு விளங்கும். எனவே கெடுதலான சக்திகள் நீங்கும். நீங்களே கூட இதைச் செய்து கொள்ளலாம்.

தாய்மார்கள் வீட்டிலே கோலம் போடும் போது தூய்மையான இடத்தில் இதைப் போட்டு வணங்கவும் செய்யலாம். பாலும் குங்குமமும் கலந்து அறைகளை அமைக்கலாம் என்று ஆகமம் அனுமதிக்கிறது. யந்திரத்திற்கு பூபோடு முன் உருவேற்ற வேண்டும். உருவேற்றுதல் என்றால் மெல்லேன உச்சரித்தல். இதனை ஐதுரை என்று தமிழில் சொல்வார்கள். பாதி தனக்கு மட்டும் கேட்பதாகவும் பாதி மகத்திற்குள்ளாகவும் உச்சரிப்பதை ஐதுரைத்தல் என்பார்கள். திருமுருகாற்றப்படையில் கூட இது வரும். ஐயவி அப்பி ஐதுரைத்து என்பது திருமுருகாற்றுப்படை வாக்கு.

எனவே எவ்வளவுக்கெவ்வளவு ஐதுரையாக உருவேற்றுகிறீர்களோ அவ்வளவுக்கு அவ்வளவு பலன். என்ன மயில்வாகனன்! நன்றாகக் கவனிக்கிறீர்களா? திருமந்திரயந்திரம் வைத்து ஜவிப்பது பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

வழிபாட்டின் முடிவில் தூப, தீப ஆராதனை செய்து சிவ சிவ என்கிலர் தீவினையாளர் என்ற திருமந்திரப்பாடலைப் பாடுங்கள் என்ற கூறி நிறைவு செய்கிறேன். (கூட்டத்தில் இப்பாடலைப் பற்றி ஏதோ கேள்வி கேட்கிறார்)

சரி, இந்தப் பாடலைப் பற்றி கொஞ்சம் சொல்கிறேன். ஏனென்றால் இதை மறுபடியும் எப்ப சொல்ல நேருமோ? மறுபடியும் நான் மலேசியாவிற்கு விசா வாங்கி வரவேண்டும்.

இந்தப் பாடலில் வரும் சிவ என்பது சொல் அல்ல மந்திரம். நமசிவய என்பது தூல பஞ்சாட்சரம். சிவயநம என்பது சூக்கும பஞ்சாட்சரம். சிவயசிவ என்பது காரண பஞ்சாட்சரம். சிவ என்பது அதி சூக்கும பஞ்சாட்சரம். சி என்பது மகாகாரண பஞ்சாட்சரம். இந்தப் பாடலில் வரும் சிவ என்பது அதிசூக்கும பஞ்சாட்சரம். இதை வைத்தப் பாடிய இந்தப் பாடல் தமிழில் வரும் சிவகாயத்ரி பாடல். இப்பாடலில் வரும் சிவ என்பது அதிசூக்கும் பஞ்சாட்சரம். இந்தப் பாடலில் ஒரு குறிப்பு வைத்திருக்கிறார்.

சிவசிவ என்கிலர் தீவினை யாளர் – இதில் இரண்டு சிவ

சிவசிவ என்றிடத் தீவினை மாளும் – இதில் இரண்டு சிவ

சிவசிவ என்றிடத் தேவரு மாவர் – இதில் இரண்டு சிவ

சிவசிவ என்னச் சிவகதி தானே – இதில் மூன்று சிவ

மொத்தம் எண்ணினால் இந்தப் பாடலில் 9 சிவ வரும். இந்தப் பாடலை 12 முறை பாடினால், 129=108 முறை அதிசூக்கும பஞ்சாட்சரத்தை செபித்த பலன் கிடைக்கும். இப்படி ஒரு குறிப்பை வைத்துப்பாடியிருக்கிறார். இதையெல்லாம் தெரிந்தெடுத்துப் பயன்படுத்திக் கொள்வது நம் கடமை.

திருவம்பல சக்கரத்தை உருவேற்றித் தீபாராதனை காட்டும் போது இந்த சிவகாயத்ரி திருமந்திரப்பாடலை 12 முறை பாடினால் அந்த வீட்டில் ஜோதி விளங்கும். அது உங்களுக்கு ஊக்கம் தரும் உங்களை உட்செலுத்தி நிற்கும். வேறு எந்த யந்திரமும் வேண்டியதில்லை. இது ஒன்றே உங்களுடைய வீட்டிலே எல்லாவற்றையும் உருவாக்கிக உற்சாகம் அளிக்கும் என்று சொல்லி இதற்கு மேலும் நீட்டிப் பேசுதலை நினைக்கவும் பயந்து மயில் வாகனனின் கேள்விக்கு உரிய பதிலை நிறைவு செய்யலாம் என்று எண்ணுகிறேன். திருமந்திரத்திலே குறிப்பிடப்படும் கிரியைகளை முழுமையாக சொல்லிவிட்டதாக நான் நினைக்கவில்லை. அப்படியொரு மனநிறைவு எனக்கு இல்லை. காரணம் திருமந்திரத்திலே எவ்வளவோ இருக்கு. இந்த குறிப்பிட்ட நேரத்திலே எவ்வளவு சொல்ல முடியுமோ அதை இறைவன் திருவருளால் உங்கள் முன் எடுத்து வைத்திருக்கிறேன். இந்த அளவாவது சொல்லுதற்கு திருவருள் வாய்த்ததே என்று சொல்லிக் கொண்டு அதற்காக திருமூலருக்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

(கூட்டத்திலிருந்து வேறொரு அன்பர், மந்திரம், தந்திரம் என்று சொல்கிறார்களே அவற்றிற்கு என்ன பொருள் என்று கேட்கிறார்)

பெரியோர்களே! மந்திரம் வேறு தந்திரம் வேறு. அப்பர் சுவாமிகள் ஒரு பாடலில் பாடுகிறார்

மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகி

தீராநோய் தீர்த்தருள வல்லான்றன்னை

திரிபுரங்கள் தீயெழத் திண்சிலைக்கைக் கொண்ட

போரானை புள்ளிருக்கு வேளூரானைப்

போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே!

அப்பர் சுவாமிகளின் வருத்தத்தைப் பாருங்கள்! அவர் வாழ்நாளில் பெரும் பகுதியை எதிர் முகாமில்— கடவுள் இல்லை என்ற முகாமில் கழித்துவிட்டார். பிறகு இங்கே வந்தார். அதனால் அந்த ஆதங்கம்.

போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே என்று பாடினார். இந்தப் பாடலில் மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகி என்று பாடி இருப்பதைப் பாருங்கள். எனவே மூன்றும் வேறு வேறு என்று தெரிந்து கொள்கிறோம்.

மந்திரம் என்ற சொல்லிற்கு அடியேன் என்னுடைய நூல் ஒன்றில் உரை எழுதியுள்ளேன். அதாவது பாம்பன் சுவாமிகள் பாடியருளிய பதினோரு பாடல்களைக் கொண்ட தௌத்தியம் என்ற நூலிற்கு அடியேன் அனுபவப் பேருரை ஒன்றை எழுதி உள்ளேன். அதிலே மந்திரம் என்பது பற்றி உரை செய்துள்ளேன். நேற்றும் மந்திரம் என்ற சொல்லைச் சிறிது ஆராய்ந்தோம்.

அதையே இன்று வேறு ஒரு கோணத்தில் சிந்திப்போம். பெரியோர்களே! எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்பது தொல்காப்பியம். இந்த உலகை உற்பத்தி செய்வது பெருமான்—அதாவது இறைவன். எதற்காக?

அறியுந் தன்மை உடைய சித்துப் பொருள் ஆன்மா. ஆனால் இந்த அறிவை வேலை செய்யவிடாமல் ஆணவம் எனஎ்ற அறியாமையாகிய இருள் அழுத்துகிறது. இந்த இருளைப் போக்க வேண்டும். அதற்காக இந்த உலகை இறைவன் படைக்கிறான். இந்த உலகைப் படைக்கும் போது மாயை என்னும் பெரிய பொருளில் இருந்து படைக்கிறான். சித்தாந்தத்தில் மாயை என்பது உள்பொருள். ஆதிசங்கரரின்

ஏகான்மவாதத்தில் அது இல் பொருள். அப்படியே கொள்ளலாமா என்று கேட்டால் உடனே அது சொல்லொணாதது—அநிர்வசனீயம் என்பர். சொல்லொணாதது என்றால் அது என்ன என்றால் எனக்குத் தெரியாது என்கிறான். இங்கே மாயைக்கு அது பொருள் அல்ல. மாய்+ஆய் என்கிற தூய தமிழ்ச் சொல் இரண்டின் கூட்டுச் சொற்றொடராக அது கொள்ளப்படுகிறது. அதாவது உள் பொருளாகக் கொள்ளப் படுகிறது. மாயை என்றால் பிரமை அல்ல மாயை என்றால் அவித்தை என்ற பொருளில் சித்தாந்தத்தில் கையாளப் படுவதில்லை. இந்த மாயையை எடுத்து உலகத்தைப் படைக்கிறான் பெருமான்.

சுத்த மாயைக்குப் பெயர் விந்து என்று சொல்வார்கள். அதிலிருந்து எழுத்தை உருவாக்குகிறான் இறைவன் அதிலிருந்து சொல் உருவாகிறது. அதிலிருந்து மந்திரம் உருவாகிறது. எனவே சுத்தமாயையான விந்துவிலிருந்து 3 உருவாகின்றன. அவை 1) எழுத்து 2) சொல் 3) மந்திரம். எழுத்து—வன்னம் என்று வடமொழியில் சொல்லப்படுகிறது சொல்—பதம் என்று சொல்லப்படுகிறது. அதற்கப் புறம் மந்திரம்—இது மந்த்ரம் என்று வடமொழியில் சொல்லப்படுகிறது.

வன்னம், பதம், மந்திரம் என்ற இந்த மூன்றும் பெருமான் சுத்தமாயையிலிருந்து நம் அறிவு விளங்கவதற்காக விரித்துக் கொடுக்கப்பட்டன. இந்த மூன்றையும் சேர்த்து சொல் உலகம் என்று கூறுவர்—சொல்லினாலே ஆக்கப்பட்ட உலகம். இது சூக்குமமானது. நம் கண்ணுக்குப் புலப்படாமல் ஒலி வடிவில் இருப்பது. இந்தச சொல் அத்தனையும் தூலமாகப் படைத்தது பொருள் உலகம். அது தான் கலை, தத்துவம், புவனம் என்று மூன்றாக விரிந்து தூல உலகமான பொருள் உலகமாயிற்று.

ஆகவே மாயையில் ஒரு பகுதி சொல்லுலகமாக இருக்கிறது. இன்னொரு பகுதி பொருள் உலகமாக இருக்கிறது. இரண்டும் ஒன்றில் இருந்து தானே வந்தது. எனவே ஒன்றுக்கு ஒன்று தொடர்பு உண்டு. ஆகவே இந்த உலகத்தில் உள்ள அனைத்துப் பொருள்களையும் குறிப்பிட்டுச் சொல்ல சொல்லை வைத்தான். அந்தச் சொல்லின் மூலம் அறிவை விளங்க வைத்தான்.

இந்த சைவ சித்தாந்தக் கருத்தை உள்வாங்கித்தான் தொல்காப்பியர் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்று நூற்பா செய்தார்.

எனவே, சொல் உலகம் அனைத்தும் பொருளுலகத்துடன் தொடர்பு உடையது. தொல்காப்பியத்திற்கு சேனாவரையர் உரையில் தான் இந்தக் குறிப்பைப் பார்க்க முடிகிறது. மற்றவர்கள் எல்லாம் இதன் பக்கமே போகவில்லை. நச்சினார்க்கினியர், தெய்வச் சிலையார், பேராசிரியர் யாரும் இவ்வளவு அழகாக சொல்லதிகாரத்திற்கு உரை செய்யவில்லை.

சொலலுக்கும் பொருளுக்கும் தொடர்பு உண்டானாலும் சொல்லோடு பொருளை முழுமையான தொடர்பு கொள்ளும் வகையில் நமக்கு ஏற்ற அருள் பக்குவம் வேண்டும்.

நான் ஒரு எலக்டரிகல் எஞ்சினியர்—மின்னியல் பொறியாளன். ஒரு மின் விசிறி பழுதென்றால் அதனை நான் சரி செய்து கொடுத்து விடுவேன். அதற்குரிய அறிவு என்னிடம் உள்ளது. வேறு ஒருவரைப் பார்த்து—ஏன் சார்! நீங்கதானே இந்த மன்றத்தின் செயலாளர். மன்றக் கட்டிடத்தில் உள்ள இந்த மின்விசிறி பழுதாகி விட்டிருக்கிறது. இதைச் சரி செய்யுங்கள் என்று கட்டளையிட்டால் அவர் என்ன செய்வார் பாவம்! அவருக்கு என்ன தெரியும்? ஒரு மின்விசிறி பழுதுபார்க்கும் எலக்ட்ரிஷியனை நோக்கி ஓடுவார்.

அதைப்போலச் சொல்லுக்கும் அதற்குரிய பொருளுக்கும் உரிய முழுத் தொடர்பையும் அறிந்து பயன்படுத்தும் ஆற்றல் பெற்றவர்கள் மொழி நிறைமொழி அந்த ஆற்றல் குறைந்தவர் என்று கூறும் மொழி குறைமொழி.

சுந்தரர் முதலையுண்ட பாலனைப் பாடல் பாடி மீட்டார். கரைக்கால் முதலையைப் பிள்ளைதரச் சொல்லு காலனையே என்று பாடினார் அது நடந்தது அது நடப்பதற்குரிய எல்லாம் நடந்தது. ஏனென்றால் சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பு எது? எப்படி அதை முறையாகப் பயன்படுத்தினால் குறித்த

பொருளை நிகழ்விக்க முடியும் என்று சரியாகத் தெரியும் அவர்க்கு. நமக்கோ சொல்லுக்கும் பொருளுக்கும் உரிய தொடர்பு சரியாகத் தெரியாது.

தமிழ்ப் புலவர்களில் பலர் அறம்பாடி வாழவும் தாழவும் வைக்கும் வல்லமை படைத்தவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதை வரலாறுகள் மூலம் அறிகிறோம். எனவே அவர்கள் சொல்லுக்கும் அதன் பொருளுக்கும் உள்ள தொடர்பை முழுமையாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். ஔவையார் பட்டுப்போன மரத்தில் பலாத் தழைக்கப் பாடினார். எப்படியென்றால் அவருக்கு அந்தத் தொடர்பு அத்ததுப்படி. ஒரு பெண் கீரையைச் சமைத்துக் கொடுத்தாள்—ஔவையாருக்கு. சுவைத்து உண்ட பாட்டி மகிழ்ந்து பாடினாள்

வெய்தாய் நறியதாய் வேணடளவு தின்பதாய்

நெய்தான் அளாவி நிறம்பசந்து—பொய்யா

அடகென்று சொல்லி அமுதத்தை இட்டாள்

கடகம் செறியாதோ கைக்கு

என்று பாடினாள். உடனே பொன்னால் ஆன வளையல் அப்பெண்ணின் கைகளில் அணிபெற நின்று குலுங்கியது. இதைக் கேட்ட இங்குள்ள பெண்களுக்கு ஐயோ! இப்ப ஔவையார் இல்லையே என்ற ஏக்கம் தோன்றும். இருந்தால் நம்ம வீட்டிற்குக் கூப்பிட்டுப் போகலாமே என்று எண்ணம் அவர்கள் முகத்தில் ஓடகிறது என்பது பார்த்தாலே தெரிகிறது.

அது ஒரு புறம் இருக்கட்டும். இவ்வாறு சொல்லுக்கும் பொருளுக்குமத் உள்ள தொடர்பை முறையாகப் பயன்படுத்தும் ஆற்றல் உடையவர் களே நிறைமொழிமாந்தர். அந்த நிறைமொழிமாந்தர் உரைப்பதே மந்திரம். இதையே, நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப என்று பாடினார் தொல்காப்பியர்.

அந்த மொழியில் அந்த ஆற்றல் வெளிப்படையாக நமக்குத் தெரியவில்லை மறைவாகப் பொதிந்துள்ளது. எனவே அந்த நிறைமொழியை ஆற்றல் மறைந்துள்ள மறைமொழி என்றார்.

இந்த மறைமொழி தானே மந்திரம் என்ப என்றார் தொல்காப்பியர். இங்கே தானே என்ற சொல்லுக்கு உரையை சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் மூவருமே ஒஅரே மாதிா எழுதி உள்ளனர். அதாவது தானே என்று ஏகாரத்தால் பிரித்ததர் இவை தமிழ் மந்திரம் எனறற்கு என்று உரைஆசிரியர்கள் எல்லாம் உரை செய்திருக்கிறார்கள். எனவே தமிழில் மந்திரங்கள் இருந்தன என்பதை உரை ஆசிரியர்கள் மூவரும் உறுதி செய்துள்ளனர்.

இதில் இன்னொன்றும் நாம் நினைவில் வைக்க வேண்டும. அதாவது முதலில் சொல்லக்கு உரிய பொருள் எது என்பதை அறிந்த கொள்ள வேண்டும். அப்படி தெரிந்து கொண்டால் மந்திரம் தெரிந்துவிடும். இதை மந்திரான்மா என்று கூறுவர். அடியேன் இதை தௌத்தியம் என்ற நூலில் விரிவாக எழுதியுள்ளேன்.

ஒரு எருமையை வரவழைக்க வேண்டுமென்றால் முதலில் எருமை என்ற சொல் தெரிந்திருக்க வேண்டும். அந்தச் சொல் அதற்கு அடிப்படை. இந்தச் சொல்லுக்கும் அது குறித்த எருமை என்ற பொருளுக்கும் உரிய தொடர்பறிந்து சொல்லைப் பயன்படுத்தினால் எருமையை நினைத்த இடத்தில் வரவழைத்து விட முடியும். ஏன் சார்! முதல் முதலில் எருமையை எடுத்துக் கொண்டீர்கள் என்று நினைத்துவிடாதீர்கள். மந்தத்திலிருந்து தானே தீவரத்திற்குப் போக வேண்டும். எடுத்தவுடனே தீவிரத்திற்குப் போவது அருமை ஆகவே இங்கே எடுத்துக் கொண்டது எருமை.

ஒரு சின்ன உதாரணம் கூறினால் இது விளங்கும். நான் நேரில் பார்த்த சம்பவத்தை கூறுகிறேன். கருடராஜா என்ற பெயருடைய ஒருவர் இருந்தர். அவர் ரயிலவே டெபார்ட்மெண்டில் ஸ்டேஷன் மாஸ்டராக இருந்தார். அவர் மந்திரத்தால் பாமிபன் விஷத்தைப் போக்குவார். அவருக்குப் பாம்பு தீண்டிவிட்டது என்று தொலை பேசியில் அழைப்பு வரும். வந்தததும் உடனே பெயரைக் கேட்பார். எந்த இடம் என்று கேட்பார். உடனே ஒரு மந்திரம் சொல்வார் அங்கே பாம்பு தீண்டப் பெற்றவர்க்கு விஷம் இறங்கிவிடும். இப்படி டெலிபோன் மூலமாக அல்லது நேரடியாகப் பலபேருக்கு நன்மை செய்தார். இவர் வாரியார் சுவாமிகளின் சொற்பொழிவு ஒன்றிற்கு வந்தார். (அது வேலூரில் வருடா வருடம் நடக்கும் சஷ்டித் தொடர் சொற்பொழிவு). அங்கே ஒருவருக்கு அரவம் தீண்ட இவர் விஷத்தைப் போக்கினார். அப்போது தான் தெரிந்தது இவர் இப்படிச் செய்ய வல்லவர் என்பது. சொற்பொழிவு கேட்க வந்தவர், வந்த இடத்தில் பாம்பின் கடியுண்ட ஒருவர்க்கு விஷத்தைப் போக்கி காட்டினார். இவர் மந்திரத்தைச் சொல்லும் போது முகமே மாறிவிடும். இங்கே கூட கூலாயில் நடைபெற்றக் தமிழ்க் குடமுழுக்கில் பிரதிட்டையின் போது கலசத்தில் திருமூலரின் முகம் தெரிந்தது என்று சிலர் சொன்னனார்கள். அது தமிழ் மந்திரத்தின் ஆற்றல்.

இங்கே கருடராஜா விஷம் இறக்க மந்திரம் சொல்லும் போது நடப்பது என்ன? அவருடைய தூல ஆன்மா மந்திரான்மாவாக மாறி கருடனுடைய தன்மையைப் பெற்று விடுகிறது. அந்தப் பார்வையில் கருடனுடைய விஷம் நிக்கும் ஆற்றல் தளும்ப விஷம் தீர்நதுவிடுகிறது.

நமசிவய என்பதும் அப்படித்தான். இறைவனை நம்மிடம் கொண்டு வந்து சேர்ந்துவிடும். இதற்குத் தான் மந்திரம் என்று பெயர். இந்த மந்திரமே நடராசப் பெருமானின் திருமேனி வடிவாகி நிற்கும். இந்த மந்திரத்திற்கு 5 படி நிலைகள் உண்டு. அத்தனைக்கும் உரிய மந்திரான்மாவாக இறைவன் இருக்கிறான் அதன்படி 5 படிநிலைகளில் மந்திரானமா விரிந்து நிற்கும். இதையெல்லாம் எடுத்துச் சொல்ல இப்போது நேரமில்லை. ஐந்தாம் நாள் திருக்கூத்து தரிசனம் பற்றிப் பார்க்கும் போது ஓரளவி பார்க்கலாம்.

எனவே சொல் உரிய ஆற்றல் பொதிய மந்திரமாகி மந்திரான்மா தோன்றி நிற்க அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வவற்றைப் பயப்பிக்க நிற்பதே மந்திரம்.

இனி தந்திரத்தைப் பார்ப்போம். மந்திரத்தைப் பயனக்படுத்தி என்ன காரியங்களைச் சாதிக்க வேண்டுமோ அந்தக் காரியங்களைப் பற்றி—முறைகளைப் பற்றி கூறும் நூல் தந்திரம். தந்திரம் என்பது ஆகமத்தைக் குறிக்கும். காரணம், ஆகமம் மந்திர வடிவில் முறைமைகளை எடுத்துக் கூறுவது.

வடமொழி வேதநெறி வந்த அந்தணர்கள் எல்லாம் சைவ நெறியினைப் பின்பற்றும் சைவ ஆகமங்களைத் தாந்திரீகம் என்று அது எதுவோ இழிவானது என்பது போல இகழ்ந்து பேசினார்கள்.

தந்திர வழி ஒழுகினோர் மூடர் பாசுபத நெறியில் நிற்போர் என்று திலீபன் என்ற திராவிட மன்னன் முன்னிலையில் வசிட்டன் என்னும் ஆரிய முனிவன் பேசியதாக வாசிட்டலைங்கம் என்ற நூலில் வருவதாக சிவஞான பாடியத்தில் வருகிறது. எனவே வசிட்டரும், வசிட்டரைப் பின்பற்றுவோரும் திராவிட ஆகம நெறிக்குப் புறம்பானர்கள் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும்.

எனவே மந்திரங்களைப் பற்றி பேசி இறைவனை அடைவதற்கான கிரியை முறைகளை எடுத்துச் சொல்லும் நூல் தந்திரம். நாம் தந்திரம என்றால் நரி போலச் செய்வதைத் தான் தந்திரம் என்று நினைத்துக் கொள்ளக்கூடாது.

மந்திரங்களை உள்ளடக்கி என்னென்ன காரியங்களைச் சாதிக்கலாம் என்று கூறுவது மூன்று வகையாக விரியும். அவை 1) மந்திரம் 2) தந்திரம் 3) ஔஷதம்—மருந்து. இந்த மூன்றும் நெறி முறைப்படி பயன்படுத்தப்படுமானால் உலகம் வாழ்வதற்கு ஏற்றதாகிவிடும். இந்த மூன்றுமாக இறைவன் இருக்கிறான் என்று,

மந்திரம், தந்திரமும், மருந்தும் ஆகி

தீரா நோய் தீர்த்தருள வல்லான்தன்னை

என்று பாடினார் அப்பர்.

நான் தாய் நாட்டில் சென்னையில் சைதாப்பேட்டையில் திருமந்திரம் சொல்லிக் கொண்டிருக்கிறேன். 67 பாட்டு தான் நடந்திருக்கிறது. ஒரு பெரியவர் சொன்னார். ஒவ்வொரு பாட்டிற்கும் இப்படி 2 மணி நேரம் விரிவுரை செய்திட்டு இருந்தீங்கன்னா மூவாயிரம் பாட்டுக்கும் 3000+2=6000 மணி நேரம் ஆகும். இதுவும் வாரம் ஒரு முறைக்குப் பங்கிட்டால் நீங்களும் இருக்க மாட்டிங்க, நானும் இருக்க மாட்டேன். என்னுடைய ஆதங்கம் என்னன்னா என் ஆயுசுக்குள் எல்லாவற்றையும் உங்கள் மூலம் கேட்ட விட வேண்டும் என்று ஆசை. இதை நீங்க மனசில வச்சிகிட்டு சொல்லணும் என்றார். அதனால் வாரத்திற்குப் பத்துப் பாடலாக விரைவுபடுத்தி உரை சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

ஆனால் இப்ப மந்திரம், தந்திரம், மருந்து என்றால் என்னன்னு கேட்டா அதற்கு ஒரு வரியிலா பதில் சொல்ல முடியும்? அவற்றின் உள்ளார்ந்த பொருளை சொன்னால் தானே விளங்கும். ஆனால் ஆண்டவனோ ஒரே நொடியில் எல்லாவற்றையும் உணர்த்தி விடுவானாம். ஒரு பார்வை எல்லாம் நொடியில் விளங்கிவிடும். முருகப் பெருமான் ஒரு பார்வை பார்த்ததானாம் அருணகிரியார்க்கு எல்லாம் விளங்கிவிட்டது.

ஆணவ அழுக்கடையும் ஆவியும் விளக்கி

அநுபூதி அடைவித்ததொரு பார்வைக் காரனும்

என்று பாடினார் அருணகிரியார்.

இப்படித்தான் நாரையூர் பொல்லாப் பிள்ளையாரும் நம்பி ஆண்டார் நம்பி என்ற ஐந்து வயது சிறுவனுக்கும் கணத்திலே எல்லாவற்றையும் உணர்த்தினானாம். பள்ளிக் கூடத்துக்குப் போகணும். நேரமாயிற்று. இப்படி நேரம் கடந்து போனால் தேசிகன் அடிப்பானே என்று குழந்தை பிளளையாரிடம் முறையிட்டது. தேசிகன்னா ஆசிரியர். பிள்ளையார், பயப்படாதே என்று அந்தக் குழந்தைக்கு ஒரே கணத்தில் எல்லாவற்றையும் உணர்த்திவிட்டார். அதற்கப்புறம் தானே நமக்குத் திருமுறைகள் கிடைத்தன. அப்படித் தானே நமக்குப் பெரியுபுராணத்திற்கு அடிப்படை நூல் (திருத்தொண்டர் திருவந்தாதி) கிடைத்தது.

இப்படிக் கணத்திலே எல்லாவற்றையும் உணர்த்த எனக்கும் ஆசை தான். ஆனால் நான் கணபதி இல்லையே. எனவே கேள்விக்குப் பதிலாக சிலவற்றை விளக்கியதில் சற்று நேரமாயிற்று. இதற்காகப் பொறுத்தருள வேண்டும் என்று உங்களை வணங்கி இந்த அளவில் இந்த உரையை நிறைவு செய்கிறேன்.

தென்னாடுடைய சிவனே போற்றி!

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!